625 5

சகல டிராமா கம்பெனியார்களும் நடத்திவரும்

சற்குணகர செங்கமல வண்ணனின் தியானத்திலுயர்ந்த

சம்பூர்ண ஸ்ரீ பக்த

# சக்குபாய் சரித்திரம்.

சென்னை: V. A. தியாகராஜ செட்டியார் மாணவர்

அருட்கவி: P. ஷண்முகவேல் பிள்ளை இயற்றியது.



...னை: முத்தியாலுப்பேட்டை,
...கராஜ செட்டியார் பதிப்பு.
1935. [விலை அணா 4

0-892MSL5,S
N24
85781

ஸ்ரீ

பாண்டுரங்கன் துணை.

சகல டிராமா கம்பெனியார்களும் நடத்திவரும்

சற்குணகர செங்கமலவண்ணனின் தியானத்திலுயர்ந்த

சம்பூர்ண ஸ்ரீ பக்த

# சக்குபாய் சரித்திரம்

இவை,

நாடகாசிரியர்:— சென்னை: முத்தியாலுப்பேட்டை,

பாலசந்தச்சரபக்கவி

**V. A. தியாகராஜ செட்டியாரவர்களின்**

மாணவர் அருட்கவி நாடகாசிரியர்.

**P. ஷண்முகவேல் பிள்ளையவர்களால்**

இயற்றப்பெற்று.


சென்னை:

**V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்**

பிரசுரிக்கப்பெற்றது.


காபிரைட்] 1934 [விலை அணா 4

# நூன்முகம்.

பண்டரிபுரநாதனின் பக்த சிரோன்மணிகளின் திவ்ய சரிதைக்ளடங்கிய ஸ்ரீமகா பக்தவிஜயமென்னும் நூலை இப்புவியின்கண் அறியாதாரிலர், அத்தகைய பக்தியிற் சிறந்த சித்தசுத்த பக்த சிரோன்மணிகளின் சரிதைகளில் ஸ்ரீபக்த சக்குபாய் சரிதையையே முதன்மையானதெனப்புகலலாம்.

தவிற, உலகில் அநேக பக்திரசம் ததும்பும் சரிதைகளைக்கண்டிருப்பினும், பக்தியிற் சிறந்த ஸ்ரீ சக்குபாய் சரிதைக்கு எவ்விதத்திலுமீடாகாதென நமது கருத்து. இச்சரிதையை சில நாளைக்கு முன் பாகவத சிரோன்மணிகள் பலர் காலக்ஷேபத்தில் உபன்யாசிக்கவும், ஆந்திரபாஷையில் சில டிராமா கம்பெனியார் நடிக்கவும் கண்ணுற்ற யான், இச்சரிதையை தமிழ் நடையில், நாடகமாக நடிக்கத்தக்க முறையில் மிகபுதிய வர்னமெட்டுகளால் பாடல்களைச்செய்து, எளிய நடையில் வசன காவியங்களை இடையிடையே யமைத்துசின், இடம் இதுகளை மிகவும் தெளிவுரவிளக்கிக்காட்டி, எனதாசிரியராகிய, சென்னை: முத்தியாலுப்பேட்டை, பாலசந்தச்சரபக்கவி, **V. A.** தியாகராஜ செட்டியாரவர்களின் ஆதரவைக்கொண்டு, மிக ஆற்றலுடனும், அமைதியுடனும், நமது நாடக நண்பர்களின் மனதை குதூஹலத்தி லாழ்ந்தச்செய்ய வரைந்து, மேற்படி **V. A.** தியாகராஜ செட்டியாரவர்களுக்கே இந்நூலின் சகல உரிமைகளையும் கொடுத்து விட்டேன்.

இச்சரிதையை கண்காணிக்கும், நமது நண்பர்கள் இதில் பல பிழைகளைக்காணினும், அப்பிழைகளனைத்தையும் ஆட்கொண்டு, இச்சிறியேன் பெயர் நாளுக்குநாள் மேன்மை பெற்றோங்கவும், இதுபோல் இன்னும் பல சரிதைகளை வரையவும், ஊக்க மளிப்பாரென சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திவ்யபொற்பாதங்களை தினமும் பணிகின்ற,

சென்னை: **V. A.** தியாகராஜ செட்டியார் மாணவன்

அருட்கவி. **P.** ஷண்முக வேலன்.

நாடகாசிரியன்.

# நாடக பாத்திரம்

| | | |
|---|---|---|
| 1 | சக்குபாய் | மித்ருராவ் பத்னி. |
| 2 | மித்ருராவ் | சக்குபாயின் கணவன். |
| 3 | கங்காதரராவ் | சக்குபாயின் தந்தை. |
| 4 | கமலாபாய் | சக்குபாயின் தாயார். |
| 5 | விமலாபாய் | மித்ருராவின் தாயார். |
| 6 | பகவான் | ஸ்ரீமந் நாராயண மூர்த்தி. |
| 7 | மாயப்பிராமணர் | பகவானின் திரு அவதாரங்கள் |
| 8 | சுந்தரி | |
| 9 | ஜோகி | |
| 10 | கபீர் தாசர் | பகவானின் தாசர்கள். |
| 11 | கமால் தாசர் | |
| 12 | ராமதாசர் | |
| 13 | ஜெயதேவர் | |
| 14 | நாராயணி | சக்குபாயின் தோழிகள். |
| 15 | லக்ஷ்மி | |
| 16 | நளாங்கினி | |
| 17 | சூடாமணி | |
| 18 | அகிலாண்டம் | |

மற்றும்

பந்துமித்திரர், புரோகிதர், பூஜாரிகள், வைத்தியர் முதலானோர்.

# ரிஜிஸ்டர் அறிக்கை

இதனால் சகலமான எனதன்பார்ந்த புத்தக வியாபார நண்பர்களுக்கும், நாடக நடிகர்களுக்கும், கவிவாண வித்வ சிரோன்மணிகளுக்கும், அடியிற் கையொப்பமிட்டுள்ள சிறியேன் தெரிவித்துக் கொள்ளும் விண்ணப்பமாவது "சற்குணகர செங்கமலவண்ணனின் தியானத்திலுயர்ந்த சம்பூர்ண ஸ்ரீபக்த சக்குபாய் சரித்திரத்தை" எனது மாணவராகிய P. ஷண்முகவேல் பிள்ளையவர்களால் அதி நூதன வர்ணமெட்டுகளுடன் வரையப்பெற்று அதின் சுதந்தர முற்றும் யான் பெற்று எனது சித்தத்திற் குகந்தபடி இதை சீர்திருத்தம் செய்து நாடகம் நடிக்கத்தக்க முறையில் பதிப்பித்து கவர்ன்மெண்ட் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்துள்ளேன், இச்சரிதையைக்கண்காணிக்கும் நமது நண்பர்கள் இதிலுள்ள பாடல்களையாவது, வசனங்களையாவது மாற்றி அச்சிடுவாரேல் இதனாலுண்டாகும் நஷ்ட ஈடுபாட்டிற்கும் கனந்தங்கிய கவர்ன்மெண்டாரவர்களின் கிரிமினல் குற்றத்திற்கும் ஈடுபடுவார்களென்பதை இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

**V. A. தியாகராஜ செட்டியார்.**

1/105, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீ

பாண்டுரங்கன் துணை.

சகல டிராமா கம்பெனியார்களும் நடத்திவரும்

சற்குணகர செங்கமலவண்ணனின் தியானித்திலுயர்ந்த

## சம்பூர்ண ஸ்ரீபக்த

# சக்குபாய் சரித்திரம்

விநாயகர் துதி வெண்பா.

நக்கன் மகனே நந்தகோபன் மைத்துனனே
தக்கோர் புகழும் தற்பரனே—இக்கணமே
ஸ்ரீபக்த சக்குபாய் சரிதையதை யான்வரைய
நீதகியே வரமதனை நல்கு.

ஸீன்:—1.] [இடம்:—கமலாபாய் அந்தபுரம்.

கதாநாயகர்:—கங்காதரராவ், கமலாபாய்.

[கமலாபாய் தனித்து அமர்ந்து புத்திர னில்லாத குறைபற்றி வருந்துகிறாள்.]

கமலா. வ-ம்:—ஆ! அகிலமுற்றும் அடி இரண்டாக அளந்த ஆதிமூலா! இவ்வடியார்கள் பூர்வத்தில் உனக்கென்ன குற்றம்புரிந்துள்ளோம், ஐயோ! இப் புவியினிடமாக எத்தகைய பாக்கியமின்றி இருப்பினு மிருக்கலாம், புத்ரெனும் நரகத்தை நீக்கும் ஓர் பாக்கியத்தை யடையாமல் இருக்கப்படாதே, ஹா!

கமலாபாய் தரு.

மாதா பிதா நீ கண்ணு என்ற மெட்டு.

மைந்தனில்லா குறையாலே
மனம் நோகுதே புவிமேலே
இந்த விதி வசத்தாலே
ஏது செய்வேன் நெடுமாலே (மை)

சேஷசயன சிங்காரா
சேயன் வரமொன்று தாராய்
மோசம் செய்யாதெனை காராய்
மோகினி ரூபவ தாரா (மை)
எங்கள் பெயர் விளங்க வேணும்
இனிதாய் பாவமொழிய வேணும்
தங்குதடை செய்திடில் காணும்
தரியாதுயிர்விடவே தோணும் (மை)
மலட்டுப் பிறவியென பிறந்தேன்
மதனைப் போரதனையான் துறந்தேன்
சலிப்பேதுமின்றி இங்கா ளிருந்தேன்
ஷண்முகன் மொழியினை லறிந்தேன் (மை)

கமலா. வ-ம்:—அகிலலோக அவதாரனாகிய ஆதிகேசவா! அடியார்களாகிய யாங்கள் ஓர் அரிய புத்திரப்பேரின் பொருட்டு முப்பத்திரெண்டுவித தானதர்மங்களைப் புரிந்தோம், அதுவுமன்னியில் இப்பாதகர்களை மைந்தனில்லாத மலட்டுப் பிறவியென பலபேர் பலவிதம் இழித்தும் பழித்துமேச பரமாத்மாவாகிய தாங்கள் இதுகளை கவனியாதிருப்பது நலமாகுமா? உனை நம்பித்தொழுத ஒருவரும் இதுபோல் துன்பத்தி லாழ்ந்தியவர்களில்லையே? அதுபோல் யாங்களும் உனக்கடியவர்கள்தானே எங்கள்மீது மாத்திரம் உனக்கேன் இத்தகைய கடுங்கோபம், ஆ! எங்களைப் படைத்தப் பிரம்மனும் இவ்விதம் பிறப்பிக்கவேண்டுமா? ஆ விதியே விதியே.

[இதற்குள் கங்காதரராவ் வருகிறார்.]

கங்காதர. வ-ம்:--பெண்ணே! கமலா!

கமலா. வ-ம்:—வந்தனம் பிராணபதி.

கங்காதர. வ-ம்:—கண்மணி! கல்யாண் எழுந்திரு.

கமலா. வ-ம்:—மங்கம் ததும்பும் தங்களின் மதிவதனம் சோர்வுற்று ஏது காரணமாக இத்தகைய திகைப்புடன் இருக்கிறது?

கங்காதர. வ-ம்:—பெண்ணே! காரணமொன்றுண்டு, அதின் பொருட்டே இவ்விடமடைந்தேன், அதை பின்புரைக்கின்றேன்.

யான் வருங்கால் நீ அதிக கூக்குறலிட்டு வருந்தியதாக தெரிந்தது, ஆயினும் இவ்விதம்.

காமி சத்யபாமா கதவை திறவாய் என்ற மெட்டு.

பல்லவி.

வீணே துயர்கொண்டு வருந்துவதேனோ
வருந்துவதேனோ ஏனோ ஏனோ ஏனோ-நீ (வீ)

அநுபல்லவி

மானே உனக்கு என்ன மனக்குறை நேர்ந்ததடி
மகிழ்ந்தே என்னிட முறைப்பாய் உரைப்பாய்
உரைப்பாய் உரைப்பாய் அடி (வீ)
ஆடையணி யிருக்க ஆஸ்தி வேணதிருக்க
யாது குறைதா னுனக்கே உனக்கே
உனக்கே உனக்கே நீ (வீ)
ஏதேனும் யான் பிழைகள் இளங்குயிலே செய்தேனோ
எடுத்துறைப்பாய் நீ மயிலே
மயிலே மயிலே அடி (வீ)

கங்காதர. வ-ம்:—கோகிலக் குரலோசை மிகுந்த எனது பிராண காதலியாகிய கமலா! நமது அரண்மனையில் உனக்கென்ன குறைவு ஏற்பட்டுள்ளது அணியாடை ஆபரணங்க ளில்லையா? உனக்குப் பணிவிடைபுரிய பாங்கியர்க ளில்லையா நீ விருப்பமுற்ற பொருள்களை அப்போதுக்கப்போது அட்டியின்றி தருவித்துத்தர யானில்லையா? இப்படியெல்லாமிருக்க உனக்கு யாது குறை ஏற்பட்டு விட்டது.

கமலா. வ-ப்:—ஐயோ! பிராணபதி! அக்குறையை யான் ஏதென எடுத்துரைக்கப்போகின்றேன், ஆ! இப்புவியினிடமாக இத்தகைய மலட்டுப் பிறப்பும் எடுப்போமா? இப்பாதகியின் மனக் குறையை நினைக்க நினைக்க,

கற்பிற் சிறந்த எந்தன் கனியே என்ற மெட்டு.

பல்லவி

உருகுதென்னுள்ளம் ப்ராண பதியே
குணநிதியே என்ன சதியே இது தகியே

அநுபல்லவி

கருமவினையோ இது காதலா அறியேன்
கபடமேது செய்தோமோ விபரமே புரியே

தருணமே எனதுயிர் தரணியில் தரியேன்
தத்தளிக்குதே எனதாவி
துயர் மேவி மிககூவி யான்பாவி (உ)

கமலா. வ-ய்:—நாதா! தங்கள் இப்பாதகிக்கு பலவிதமான ஆஸ்திபூஸ்திகளைதான் அதிகசிரமத்துடன் தேடிவைத்துள்ளீர், அது பற்றி நமக்குயாதுகுறையுமில்லை தான், ஆனால் அப்பொருள்முற்றும் நமது தேகபோஷிப்பிற்கும் சகல சௌகரியங்களுக்கும் உதவுமே யன்றி நம்பெயர் நமக்கு பிற்காலத்தில் ஓங்கியுலவ, இப்பொல்லாத,

மேற்படி அநுபல்லவி தொடர்.

பொன் பொருளிருந்தென்ன பூவினில் பயனே
படைத்தான் நமையேபெரும் மலடென அயனே
தன்மையுடன் நம்பெயர் தழைத்திட தானே
தனையனென்று இல்லையே நாதா
சுகுணபோதா புகழ்வேதா இதுவாதா (உ)

கமலா. வ-ய்:—அந்த நான் முகன் படைப்பிற்குள்ளடங்கிய மானிடப்பிறவியிலும் மலட்டுப்பிறவியாகவா பிறக்கவேண்டும், ஆஹா! நம்விஷயத்தில் அந்நான்முகனுமா இத்தகைய வஞ்சனைபுரிய வேண்டும், அடடா! அந்த நந்தகோபனுக்கு அடியார்களாக ஜெனிக்கச்செய்த நம்மை நம்பிறவியின் பெயர் ஓங்க ஓர் புத்திரப்பேரடைய அந்த நான்முகன் அனுக்கிரஹிக்கப்படாதா? ஐயோ! அப்புத்திரப்பேரடையும் பொருட்டு அந்த பண்டரிநாதனுககு தொண்டு புரிந்தது மல்லாமல்,

மேற்படி அநுபல்லவித்தொடர்

முன்னாள்செய்தவினையால் முறைமையாய் இருந்தோம்
முப்பத்து ரெண்டுவித தாமனமே புரிந்தோம்
ஒன்றும் சுகமில்லாத உண்மையை யறிந்தோம்
உதவாது தவதிந்த ஜென்மம்
பெருங்கர்மம் செய்தோம் வர்மம் மிகமர்மம் (உ)

கமலா. வ-ம்:—மதியில் மிகுந்து மாக்ஷிமையில் சிறந்த மன்னவா! நாம் இம்மலட்டுப் பிறவியைத்தாங்கி இம்மாநிலத்தினிடமாக வாழ்வதைவிட நம்மிருவர் மனதும் ஏகோபித்து மடிந்து மகானுபவராகிய மாயபிரானின் அடிமலரைச்சேரினும் இப்பிறவி யொழிந்து மறுபிறவி எடுத்தாகிலும் ஓர் மழலைப்பேரடைய மாட்டோமா?

கங்காதர. வ-ம்:—பெண்ணே! உனக்கென்ன, இத்தகைய கொடியச் செய்கை மனதில் குதித்தெழுந்தது, மடிந்தபோதிலும், இருந்தபோதிலும் அவரவர் செய்த வினையை அவரவரேயல்லவோ அனுபவித்துத் தீரவேண்டும்.

கமலா. வ-ம்:--ப்ராணபதி! எல்லாமறிந்த தங்களுக்கு இவ்வடியாள் எதுரைக்கப் போகின்றேன், தவிர, நாம் முன்ஜென்மத்தில் புரிந்த கர்மானுச்சாரத்தின்படி இப் பிறவியில் மலடராக பிறந்திருப்பினும், இப் பிறவியில் புரிந்துள்ள தான தர்மங்களின் பலனை யாவது அடுத்தப் பிறவியில் அடையமாட்டோமா? வாருங்கள் நாதா! நாமிருவரும் ஒருங்கு சேர்ந்து மடியலாம் ப்ரம்மசிருஷ்டி எப்படியாயினும் நமைவிடட்டும்.

கங்காதர. வ-ம்:—ஆ! பக்தவத்ஸலா பேதமையென்பது மாதற்கணிகலமெனும் பெரியோர் மொழியைஇப்பெண்மணியிடமே அறிந்தேன். ஆ! என்ன செய்வேன், என் மனைவியின் மனதை எவ்விதம் தேருதலடையச் செய்வதென தோன்றவில்லையே? ஏ! மாதற்கரசி!

கங்காதரராவ் விருத்தம். இராகம்—பைரவி.

காம்செய்த வினையதற்கு நான்முகன்மீது குற்றம்
தாமுறைத்திட நமக்கு தகுமோடி தையலாளே
பூமியில் ஜெனித்தபோதே புத்தெனும் நரகம்நம்மை
யாமது விட்டிடாது அறிகுவாய் அறிகுவாயே.

கங்காதர. வ-ம்:—பெண்ணே! புத்திரபாக்கிய மிருப்பின் அது நம்மை விடாது, எவ்விதமேனும் அடையவே செய்யும், அதைவிட்டு அந்நான்முகனை நிந்திப்பதில் தான் பயன் யாது? தவிர நமதாவியைத் துறப்பதில்தான் நாமடையப்போகும் பயனென்ன? ஆனால் யான் ஒரு கருத்துபற்றி உனையடைந்தேன் அது விஷயத்தில் உடன்படுவாயாகில் ஒரு வேளை நமது நெஞ்சம் குதூகலமடையலாம்.

கமலா. வ-ம்:—ப்ராணகாதலா! அவையாதென இவ்வடியாளிடமுரைக்கப்படாதா? என்ன?

கங்காதர. வ-ம்:—பெண்ணே! பதராதே! அதையுரைக்கும் பொருட்டுதானே யானிவ்விட மடைந்தேன் ஆதலால் தெரிவிக்கின்றேன் கேள்,

### கங்காதரராவ் கண்ணி.

தேயிலைதோட்டத்திலே என்ற மெட்டு.

கேளடி மாமயிலே ஒன்று
கேட்டறிந்தே னதை தாட்டிகமாய்ச் சொல்வேன்

மீளவழி யொன்றுண்டு அதின்
மார்க்கத்தினால் புத்ரப் பேறை யடையலாம்
தவத்திற் சிறந்தவராம் ஒருவர்
சாதம் புசித்திட மாதே வந்தாரடி
அவரிடத்தில் நமது பெரும்
அருவினையைச் சொல்லி பெரிதும் புலம்பினேன்
எந்தன் குறைக்கிரங்கி அவர்
எடுத்துரைத்தார் துயர் விடுத்திடவே நாமும்
சிந்தனையை யொழித்து இந்த
சமைய மிருவருட் அமைதியாய் புரப்பட்டு
பண்டரிபுரமணுகி நல்ல
பாண்டுரங்கனை நாம் வேண்டியே பூசித்து
தெண்டமது புரிந்து அந்த
தீனரக்ஷகனை வேணவே துதித்து
அன்றிரவு முழுதும் அடி
அன்னமே அன்னவர் சந்நிதி தன்னிலே
பின்னமின்றி துயின்று மறுநாள்
பொழுது விடிந்ததும் விழித்து நமதில்லம்
வந்தால் குறையனைத்தும் தீர்ந்து
வார்குழலாளே நம் பேர் விளங்க ஒரு
மைந்தன் பிறப்பானென்றார் அதை
மாக்ஷியாய் கூறிட ஆக்ஷியுடன் வந்தேன்
(கேளடி மாமயிலே)

கங்காதர. வ-ம்:—பெண்ணே! கவனித்தனையா? இதைவிட்டு வீணில் ஏன் நாம் மடியவேண்டும்.

கமலா. வ-ம்:—ப்ராணபதி உண்மைதானு? ஆனுல் வாருங்கள் செல்வோம்.

[போகிறூர்கள்.]

சீன்:—2.] [இடம்:—பண்டரிபுரம் கோயில்.

கதாநாயகர்:—கங்காதரராவ், கமலாபாய், பகவான்.

[கங்காதரராவ், கமலாபாய் இருவரும் பண்டரிநாதனின் கோயில்முன் நின்று தனது குறைகளை முறையிடுகின்றனர்.]

கதனகுதூ கலராகப்ரீயே என்றமெட்டு.

பல்லவி

ஜெகநாயகா ஸ்ரீவாசுதேவா
ஜென்ம சாபல்யமே தீர்மஹானுபாவா (ஜெ)

அநுபல்லவி

சுகபோகனே சுகுணவதாரா
சோருதெங்கள் நெஞ்சம் காருதார வீரா (ஜெ)

சரணம்

மகப்பேரில்லாத மார்க்கத்தால் மெலிந்தோம்
மாதவனே உந்தன் மலரடி பணிந்தோம்
புகழேபெற புண்யனே கண்பாராய்
பூரிப்பாய் ஷண்முகன் சீரிசைபைக்காராய்-சீராய் (ஜெ)

கமலா. வ-ம்:—பாவணர்புகழ்ந்தேற்றும் இப்பண்டரி புரத்தின் கண் எழுந்தருளி யிராநின்ற புண்டலீகா! பக்தசிரோன்மணி களுக்கிரங்கும் பாமதபாளா! அன்று பாற்கடலில் கடைந்த அமிர் தத்தை மோகினி ரூபமுடன், தேவாசுரர்களுக்கு பகிர்ந்தளித்த பக்தவத்சலா! பாதகர்களாகிய அரக்கர்களை யொழிக்கவும், துவார பாலர்களின் சாபத்தை யழிக்கவும் பத்தவதாரம் செய்த பாண்டு ரங்கா! பஞ்சவர்களின் தேவியாகிய பாஞ்சாலிக்கு பார் சபையில் துயில் வளரச்செய்த பரமாத்மா! இப்பாதகர்கள் படுந்துயர் உன துளம் சற்றேனுமிறங்கவில்லையா? ஹா! இப்பாதகர்கள் பொருட்டு உன்மனதும் இவ்விதமிருக்குமா? ஐயோ உன் மனதென்ன கல்லா! இரும்பா! ஆஹா! இது வனைத்தும் உனது நீதியின் அழகா! ஹா! விதியே விதியே!

கங்கா. வ-ம்:—பெண்மணே! வீணில் பகவானை நிந்திப்பதில் பயனேதுமில்லை? நாம் செய்த பழிபாவங்களுக்கு பரமாத்மா யாது செய்ய முடியும். ஆதலால்,

கங்காதாராவ் விருத்தம். இராகம்—செஞ்சுருட்டி.

தன்மையிற் சிறந்தபெண்ணே தவஸ்ரேஷ்ட முனிவர்சொன்ன
பொன்மொழி போலேநாமும் பண்டரி க்ஷேத்ரம்வந்தோம்
நன்மைசேர் பாண்டுரங்கன் நற்கழல் தன்னைபோற்றி
இன்றைய இரவுபோக்கி ஏகுவோம் நாளைநாமே.

கங்கா. வ-ம்:—கண்மணி! பெரியோர்களின் மொழி கிஞ்சிற் றும் பொய்யாகாது. தவிரவும், அன்னவர் என்முன், தவத்திற் சிறந் தவர்போல் தோன்றினர். ஆதலால், அன்னவர் மொழிபோலவே

நாம் இன்றிரவு இவ்விடத்தில் சயனித்துக்கொள்ளலாம். பிறகு பகவானது கிருபை நம்மை எக்கதியிலீடுபடுத்தினும் படுத்தட்டும்.

கமலா. வ-ள்:—அப்படியே செய்வோம் ப்ராணபதி!

[இருவரும் சயனித்து அதிக நித்திரையிலிருக்கும் சமயம் பகவான் ப்ராப்தமாகின்றார்.]

## பகவான் தரு.

அந்த மிகுந்த முகுந்தன் மருகனே வா என்ற மெட்டு.

சஞ்சலங் கொள்ளாதே விரைவாய் வந்தே னெதிர் விரைவாய் விரைவாய்
கொஞ்சம் நாளில் ஒரு பெருவாய் கோதையை நீ பெருவாய் பெருவாய் (ச)
பக்தியினில் மிகும் பிறப்பாள் பாக்யவதி பிறப்பாள் பிறப்பாள்
சக்குபாய்யென்று இருப்பாள் பெயர் விளங்கி இருப்பாள் இருப்பாள் (ச)

[கமலாபாயின் சொற்பனத்தில் பகவான் வரந் தந்து மறைகிறார் கமலாபாய் திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.]

கமலா. வ-ப்:—ஹா! பரமாத்மா! இவ் வெளியவர்மீது மன திறங்க இத்தனை காலமா ஆகியது, ஆஹா! இப்பொழுதல்லவோ உனது கிருபையின் பொருட்டு புனிதமாகினேம், ஆதிமூலமெனும் அரிபரந்தாமா! அடியவர்களின் குறைக்கிறங்கும்,

தினந்துதிப்பாய் நெஞ்சே என்ற மெட்டு.

பல்லவி

தசரத ரவிகுல தாரகநாமா (த)

அநுபல்லவி.

தாரகநாமா ஸ்ரீ பரந்தாமா (த)

சரணங்கள்.

கசிந்து நொந்தமனதின் கவலை யொழித்திடவே
கனவில் தோன்றின திரு கண்ணபிரானே (த)

உனதுமொழிபொய்யாமா ஊக்கமது வீண்போமா
உம்பர்கள்பணிந்தேற்றும் உயர்குல ராமா (த)

இன்றல்லோ எங்கள் குறை எல்லாமொழிந்ததையா
இப்பிறவியிலெடுற இனிதுடனையா (த)

கமலா. வ-ம்:—உம்பர்கள் பணிந்தேற்றும் உமாபதியின் மைத்துனராகிய மாயவதாரனே, தேவரீராகிய தாங்கள் இவ்வடியார்கள் மீது இத்தகைய கருணைவைப்பீரென எனது சொற்பனத்திலும் நினைக்கவில்லையே, எங்களின் மீதுற்ற கோபம் நீங்குதற்கு உமக்கு இத்தனை காலமா ஆகியது, ஆயினும் நமது நாதனை எழுப்பி இச்செய்தியை யுரைப்போம், நாதா! நாதா! எழுந்திருங்கள், நாம் கோரிவந்த கொள்கை பலித்தது, வாருங்கள் நம் நகருக்குச் செல்வோம்.

கங்காதா. வ-ம்:—அடி! என்ன உனக்கு பைத்தியமா பிடித்து விட்டது? இந்த இரவிலுமா உன்னுடன் வீண்வார்த்தை யாடவேண்டும்? போடிபோ! பொழுது விடியட்டும் நம் நகருக்குச் செல்லலாம், வீணில் நித்திரையைக் கெடுக்காதே.

கமலா. வ-ம்:—நாதா! என்ன இப்படி கோபித்துக்கொள்கின்றீரே? எழுந்திருங்கள் ஒரு சேதி தெரிவிக்கின்றேன்.

கங்காதர. வ-ம்:—என்னடி இது நித்திரையைக்கெடுத்தா சேதி தெரிவிக்கப்போகின்றாய்? (எழுந்து உட்கார்ந்து) என்னடிசேதி சொல்பார்க்கலாம்.

கமலா. வ-ம்:—நாதா! நாம் மனது கஞ்சலத்துடன் நித்திரை புரிகையில்,

வர்த்தகர் குலத்துதித்தமாரா என்றமெட்டு.

கண்டேனொரு சொர்ப்பனமே நாதா அதை
கழறுவேன் கேட்டிடும் விநோதா இனி
கொண்டகவலை போக்க வாதா ஒரு
குழந்தை வரமே பெற்றேன் போதா (க)

கமலா. வ-ம்:—நாம் செய்த கர்மானுசாரங்களை போக்கி நம் பொருட்டு கருணைபுரிவதற்கு

மேற்படி கண்ணித்தொடர்.

பரந்தாமன் சொர்ப்பனத்தில் வந்தார் என்னை
பகர்வாய் குறையதனை என்றார் யான்
உரைத்தகருத்தைக்கண்டு நொந்தார் ஒரு
உத்தமியைப்பெற வரந் தந்தார் (க)

கமலா. வ-ம்.—ஆதலால், ப்ராணபதி! நாம் கொண்ட கவலையனைத்து மொழிந்தது, தவிர பகவான் எனது கினவில் தோன்றி, இன்னும் பத்துதிங்கள் சென்றதும் பக்தியிற் சிறந்த ஓர் புத்திரியையடையப்போவதாயும், அன்னவளுக்கு சக்குபாயென திருநாமம் சூட்டும்படியும் தெரிவித்து மறைந்தார், ஆதலால், காதலா!

மேற்படி மெட்டு.

குறையொன்றும் நமக்கினி ஏது அந்த
கொண்டல் வண்ணன் வாக்குகள் தப்பாது ப்ராண
துரையே வாரும் செல்வோ மிப்போது கவி
தொடுத்த ஷண்முகன் தமிழ் தோது (க)

கங்காதர. வ-ப்:—கண்மணி! உண்மை தானா?

கமலா. வ-ப்:—ஆம், உண்மைதான் நாதா!

கங்காதர. வ-ப்:—ஆஹா! கண்ணே! இன்றல்லவோ நமது ஜென்மம் சாபல்யமடைந்தது; இனி நாம் காலை உதயத்திற்குள் நம் நகர் சேரவேண்டியதே ஆதலால், இப்பொழுதே,

காதல்மனோகரியை கண்டேன் என்றமெட்டு.

சென்றிடுவோம் வருவாய் பெண்ணே பெண்ணே வெகு
சீக்கிரத்தில் நம்நகர் கண்ணே கண்ணே இனி
ஒன்றும் துபரில்லையே இன்னே இன்னே-துயரொழிந்தோமே

தொகையறு

அன்னமே இதின்சூக்ஷி அறியாமலிருந்திட்டோம்
அனுதிபோலே
என்னமோ பூர்வத்தின் கர்மமோ புத்திர
னில்லாதாலே

மேற்படி பாட்டுத்தொடர்.

கருணை இன்று தான் வைத்தார் மானே மானே அந்த
கமலக்கண்ணன் நம்மீது தேனே தேனே நாம்
பெருமைப்பெருவதுண்மை தானே தானே-உனக்குறைத்தேனே

தொகையரு.

குருமுனிவ ரானவர் கூறியது உண்மையே
குலக் கொழுந்தே
அருளாக நம்பியே அடைந்திட்டோம் நாமொரு
மகவிருந்தே

மேற்படி பாட்டுத் தொடர்.

நன்மை பெறவே ஊக்கங் கொண்டோம் கொண்டோம்—நமது
நந்தகோப னருளை யுண்டோம் உண்டோம்—நல்ல
ஷண்முக வேலன் தமிழ் விண்டோம் விண்டோம்—உண்மை
தனை கண்டோம்

கங்கா. வ-ம்:—பெண்ணே! வா செல்வோம்.

கமலா. வ-ம்:—அப்படியே செல்லலாம் வாருங்கள் நாதா!
[போகிறார்கள்.]

சீன்:—3.] [இடம்:—அரண்மனை.

கதாநாயகர்:—கமலாபாய், கங்காதரராவ்.

[சில நாள் சென்று கங்காதரராவும், கமலா
பாயும் ஓர் குழந்தையைப்பெற கமலா
பாய் அதை தொட்டிலில் வளர்த்தி
தாலாட்டுகிறாள்.]

கமலாபாய் கண்ணி

பிள்ளை தாலாட்டு மெட்டு.

ஆராரோ ஆரிரோ ஆரிரோ ஆராரோ
அவதாரம் செய்தவளோ எங்கள் ஆசைதீர்க்க வந்தவளோ (ஆ)
பொன்னே யென் பொக்கிஷமே பிள்ளைகலி தீர்த்தவளே
கண்ணே என் கண்மணியே கபடமின்றி ஜெனித்தவளே (ஆ)
அழகில் சிறந்தவளே ஆணிமுத்து மாணிக்கமே
புகழில் பெருத்த யெந்தன் பூஷணமே கண்வளராய் (ஆ)
மலட்டுப் பிறவியென மாநிலத்தோ ரேசாமல்
திலகம்போல் அவதரித்த திருமணியே கண்ணுறங்காய் (ஆ)
ஆரியர் குலந்தழைக்க அன்புமிகவே செழிக்க
சூரியன் போலுதித்த சுடரொளியே கண்வளராய் (ஆ)

கமலா. வ-ம்:—எங்களின் பூர்வ பாவக்கிருதயங்களை யொழிக்கவும், யாங்கள்செய்த பலவிதமான தர்மங்களின் பலன்கள் தழைக்கவும், பிற்காலத்தில் எங்களின் பெயர் நீடித்து நிலைக்கவும் அந்த சாக்ஷாத் சாமளதேகனுகிப அக்காயாம்பு வண்ணனின் கருணைபலிதமாகவும் ஆதாரமாக அவதரித்த ஆணிமுத்தே, எங்களது ஆவலைத் தீர்த்து அளவிலாத ஆனந்தபரவசத்தில் ஆழ்ந்தச்செய்த அன்னமே அழகிலும், அதிசயமிகுந்த அன்பிலும், ஈடில்லாத உனையடைந்த எங்களது பூஜாபலனே பலன், கண்ணே! ஏன் அழுகின்றாய், வீணே அழுகாதே? உனக்கு என்ன பசியின் பொருட்டு பால்வேண்டுமா? மற்றும் எது வேண்டும்.

[இதற்குள் கங்காதாராவ் வருகிறார்.]

கமலா. வ-ம்:—ப்ராணநாந்தா! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

கங்கா. வ-ம்:—ப்ரிய சகி! ஆசிர்வாதம் எழுந்திரு! குழந்தை என்ன தொட்டிலில் விளையாடிக்கொண்டிருக்கின்றதா?

கமலா. வ-ம்:—நாதா! விளையாடிக்கொண்டுதானிருக்கின்றது. காதலா! நமது குழந்தை ஜெனித்து இத்தனை நாளாக இன்னும் திருநாமம் சூட்டுதற்கு யாதொரு ஏற்பாடும் செய்யாதிருக்கின்றீரே?

கங்கா. வ-ம்:—பெண்ணே! அது விஷயத்தை நமது குருக்களைகேட்டதற்கு சங்கு சக்ர கோதண்டனுகிய பக்தவத்சலனது நற்கருணையால் ஜெனிக்கப்பெற்ற பாலகிக்கு சக்குபாயென திருநாமம் சூட்டும்படி தெரிவித்தார். உன்மனோ வபிப்பிராயமெவ்விதம் காதலி!

கமலா. வ-ம்:—ப்ராண காந்தா! இது வரையில் தங்களின் மொழிக்கு யாதேனும் மாறுபாடாக நடந்ததுண்டா? இல்லையே; அப்படிக்கிருக்க இப்பொழுதுதானு மறுத்துப்பேசப் போகின்றேன்.

கங்கா. வ-ம்:—போகட்டும், குழந்தையை ஜாக்கிரதையையாக பார்த்துக்கொள், யான்சென்று ஸ்நானபானங்களை முடித்துக் கொண்டு வருகிறேன்.

கமலா. வ-ம்:—அப்படியே அதிசீக்கிரத்தில் சென்று வந்துவிடுங்கள் நாதா.

[கங்காதாராவ் போகிறார், பிறகு
கமலாபாய் குழந்தையை
அதிக செல்வாக்குடன்
வளர்க்கிறாள்.]

சீன்:—4.] [இடம்:—அந்தபுரம்.

கதாநாயகர்:—சக்குபாய், நாராயணி, லக்ஷிமி, நளாங்கினி, சூடாமணி, அகிலாண்டம் முதலியோர்.

[சக்குபாய் தனியாக அமர்ந்து படித்துக் கொண்டிருக்கின்றாள். இதற்குள் சக்குபாயின் தோழிகள் வருகிறார் கள்.]

நாராயணி. வ-ம்:—என்னடி சக்கு! எப்பொழுது பார்த்தாலும் படித்துக்கொண்டே தானா இருக்கவேண்டும்? படித்தபடிப்பெல் லாம் போதாதா என்ன? போகட்டும் வாடி நாமனைவரும் சாலைவழி களில் சென்று விளையாடலாம்.

சக்கு. வ-ம்:—என்ன இது? எப்பொழுதுமா விளையாடிக் கொண்டே இருக்கவேண்டும். அப்பா அம்மா இவர்கள் கண்டால் அடிக்கமாட்டார்களா என்ன?

சூடாமணி. வ-ம்:—போடிபோ பைத்தியக்காரி! இச்சிறு பிராயத்தில் விளையாடினலா உன் தாய் தந்தையார் அடிப்பார்கள், இப்பிராயத்தில் விளையாடாமல் பின்பு எப்பொழுது விளையாடப் போகின்றாய்?

லக்ஷ்மி. வ-ம்:—ஆமாண்டி. சக்கு! இன்னும் கொஞ்சகாலம் போனால், பருவபக்குவமடையப் போகின்றாய், பிறகு உன்பெற்றோர் உன்னை யாருக்காகிலும் விவாகம் செய்து வைத்துவிடப்போகின்றார் கள். அப்பொழுது நீ வீட்டுவேலைகளை செய்வதா விளையாடுவதா?

சக்கு. வ-ம்:—சரி வாருங்கள் விளையாடலாம்.

[அனைவரும் போகிறார்கள்.]

சீன்:—5.] [இடம்:—அனைவரும் போகிறார்கள்.

கதாநாயகர்:—மயாபிராமணர்.

[பகவான் சக்குபாயின் பொருட்டு ப்ராமண ரூபங்கொண்டு வருகிறார்.]

## பிராமணர் தரு.

அவிவேகமாய் என்றமெட்டு.

அநுபல்லவி

அரிகேசவா ஆதிமூலதேவா
அண்டமேயளந்த அருள்மாதவா (அ)

பல்லவி

பரிபூரணனே பண்டரி நாதனே
பக்தர்கள் துதிக்கும் பரந்தாமனே (ப)

சரணம்

அந்தராதிபா ஆதிநந்தகோபா
ஆழிமேல் துயின்ற ஆதிலக்ஷ்மி மார்பா
சிந்தனை தீராய் ஸ்யாமள ரூபனே
ஷண்முக வேலனின் தமிழ்க்கருள் பூபனே (ப)

பிராமணர். வ-ம்:—ஆதியில் நாம் அந்த கமலாபாயிக்கு அளித்த வாக்குறுதிப்படி ஐரெண்டு திங்கள் சென்று ஓர் அரிவை அவதரித்தாள் அன்னவளுக்கு நாமுறைத்தவாரே சக்குபாயென திருநாமஞ்சூட்டி அதிக செல்வாக்குடன் வளர்ந்து வருகின்றனள் தற்போது அன்னவளின் மனதை சோதிக்கும்படியும் அன்னவளின் குணதிசயங்களை அறியும் பொருட்டும் இவ்வேடத்துடன் புரப்பட்டோம், அதோ அச்சாலை வழியில்யாரோசில சிறுமிகள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர் அங்கு சென்று கவனிக்கலாம்.

[பிராமணர் போகின்றார்.]

சீன்:—6.] [இடம்:—சாலைவழி.

காதாநாயகர்:—சக்குபாய், நாராயணி, லக்ஷ்மி, நளாங்கினி, சூடாமணி, அகிலாண்டம், மாயபிராமணர்.

[சக்குபாய் தனது தோழிகளுடன் விளையாட வருகிறாள்.]

## சக்குபாய் தரு.

நேரமிதே கூடி நேசம் பெறவே என்றமெட்டு.

பல்லவி

வாங்களடி நாமே விளையாடிடுவோமடி (வா)

அநுபல்லவி

வாங்களடி மர்மம் வேண்டாமடி ஒன்றாய்
நீங்களடி எங்கும் நின்றிடாமலேயடி (வா)

சரணங்கள்

பாங்கானதோழிகளே பக்ஷமுடன் கூடிடுவோம்
பாரடி இந்தமணலில் பரிவாய் விளையாடிடுவோம்

ஏங்காமலே மனது இன்பமிக தேடிடுவோம்
இனிதுடனே வீடுகட்டி இளங்கொடியே பாடிடுவோம்
எல்லோருமே துய ரேதுங் கொள்ளாமலடி (வா)

சக்கு. வ-ம்:—அடி! நளாங்கினி! இதோ பார்த்தனையா இந்த மணல் மேடையை, ஆஹா! நாம் வேறு எங்கும் போகவேண்டியதே இல்லை. இங்கனமே அமர்ந்து இங்கு குவித்திருக்கும்படியான இந்த,

சக்குபாய் ஷை சரணத் தொடர்.

ஆற்றுமணலை ஒன்றாய் அரிவையரே கூட்டிடுவோம்
அழகுள்ள மாடியைப்போல் அன்புடனே கட்டிடுவோம்
வேற்றுமை இன்றி எல்லோரும் விளையாட்டை பாராட்டிடுவோம்
விபரமதை நம் பெற்றோரை அழைத்து வந்து காட்டிடுவோம்
வேடிக்கையாய் மன விகர்ப்பங்கொள்ளாம லொன்றாய் (வா)

சக்கு. வ-ம்:—அடி! நாராயணி! இவ்விடத்திலேயே அமருங் கள் சற்றுநேரம் விளையாடிவிட்டு சென்று விடலாம்.

நாராயணி. வ-ம்:—அப்படியே செய்யாலாமடி.

[அனைவரும் விளையாடிக்கொண்டிருக்கின் றனர் இதற்குள் மாய பிராமணர் வருகிறார்.]

பிராமணர். வ-ம்:—இச் சிறுமிகள் யாரோ தெரியவில்லை இவர்களின் நடுவில் ஓர் பெண் இருக்கின்றனள் இன்னவளை சிலர் சக்குபாய் என அழைக்கின்றார்கள் ஒருவேளை இப் பெண் ணாகவே இருப்பினும் இருக்கலாம் (சற்று யோசித்து) ஆஹா! அறிந்தேன்! அறிந்தேன்! இப் பெண்மணிதான் நமதருளால் அவ தரிக்கப் பெற்றவள். ஆஹா! இன்னவளை இச் சிறு பிராயத்திலேயே இத்தகை விளையாட்டுகளில் பழகச் செய்தால் பின்பு பருவ பக்குவ மடைந்ததும், ஓர் புருஷனுக்கு வாழ்க்கைத்துணைவியாக ஏற்படப் போகின்றாள் அது சமயம் நமது விஷயத்தில் இன்னவளுக்கு பக்தி மார்க்கங்களை யார் போதிக்கப்போகின்றனர்.

கையில் பணமில்லாமல் என்ற மெட்டு.

பல்லவி

நமதருளால் ஜெனித்த நங்கை சக்குபாயிவள்
நாணயந்தனில் மிக சிறந்தாள் (நம)

அநுபல்லவி

தமது தோழிகளுடன் தனியாக இங்கு வந்து
தான் விளையாடுவது வீண் விபரீதமிது (ந)

சரணம்

நளினமாய் இன்னும் சில நாளைக்குள்ளே இவளை
நாட்டமுடன் யீன்றோர் நல்மணம் செய்து தந்தால்
களிப்பா யிருப்பதல்லால் கருத்து நம்மீது வையாள்
கனமாயளித்த வாக்கை மனதிலிவள் நினையாள் (ந)

பிராமணர். வ-ப்:—இவளை யாருக்காகிலும் இவளது பெற்றோர் விவாகம் செய்து கொடுத்துவிட்டால் நமை ஏன் இவள் கவனிக்கப் போகின்றாள். ஆதலால் இச் சிறு பிராயத்தில்தான் இவளுக்கு நமது பக்தியை போதிக்கவேண்டும். இவளை எவ்விதம் சீர்திருத்தம் செய்யலாம்? ஆனால் ஒன்று, இவள் மணலினால் வீடுகட்டிவிளையாடிக்கொண்டிருக்கின்றாள். அதை நாம் கவனியாது போலவும், ஏதோ பக்தியினால் பஜனை செய்துக்கொண்டு வந்ததுபோலவும் பாவனைக்காட்டி அம் மணல் வீட்டை கலைத்துவிடலாம். பிறகு என்ன நடக்கிறதோ நடக்கட்டும்.

## பிராமணர் தரு.

கழுகுமலையின் கந்தவேளே என்ற மெட்டு.

பல்லவி

நாராயண நமோ ஹரியே
நாடினே னுனையருள் புரியே (நா)

அநுபல்லவி.

பாராயண உபகாரா
பகைவர்கள் குல சம்மாரா (நா)

சரணம்

நாயகி யுமையவள் நற் சகோதரனே
நவின உதாரகுண நயன ஸ்ரீதரனே
ஆயர் குலத்திலன்று வளர்ந்த சீமானே
தூய சிசுபாலனை துணித்தெரிந்தோனே
கியாதி சேர் ஷண்முகன் கவிக் கிசைந்தவனே (நா)

பிராமணர். வ-ம்:—அருள்நிறைந்த ஆபத்பாந்தவா! அன்று அமரர்களின் குறையகல அநேக அவதாரங்களை புரிந்து அந்தரர் களின் அபாயத்தை யகற்றிய அருங்கமலக்கண்ணனே! பாண்டவர் களின் துயருக்கிரங்கி பகை புரிந்த துரியோதனுதியர்களை துலைத்து பட்டாபிஷேகம் செய்வித்த பரமபாவனு! எல்லாம் உனது திரு விளையாடலே, யானிப்போது இங்கடைந்திருப்பது உனது பாக் கியமே,

பிராமணர் தரு.

ரகுபதிராகவ ராஜாராம் என்றமெட்டு.

பண்டரிக்ஷேத்திர பரந்தாமா
பாமைவிநோதனே ஹரிராமா
கொண்டல் வண்ணனே குணசீமா
கோபிகள் கொஞ்சிடும் சுகநாமா (ப)

[பஜனைபாடிக்கொண்டே சக்குபாயின் மணல் வீட்டைகலைத்து விடு கிறுர்.]

பிராமணர். வ-ம்:—ஹா! அரிஹரி! இந்த அனியாயத்திற்கு ஏது செய்வேன், அம்மணி! நீங்கள் விளையாடுதற்கு வேறு இடம் அகப்படவில்லையா இந்த பாதை வழிதானு கிடைத்தது.

[இதற்குள் சக்குபாயுடனிருந்த தோழி கள் ஓடி விடுகிறுர்கள்.]

சக்கு. வ-ம்:—ஐயா! என்ன தெரிவித்தீர்? தாங்கள் செய்த பிழைக்காக தாங்களை கோபித்துக்கொள்ளுகின்றீரா? பேஷ் பேஷ்!

சக்குபாய் தரு.

அரண்மனையில் இருப்பவளை என்றமெட்டு.

பல்லவி

நியாயமாகுமோ நீதியில்லா வேதியரே (நி)

அநுபல்லவி

கியாதியெனவே நினைந்து கலைத்தீரோ எங்கள் வீட்டை (நி)

சரணம்

நிந்தனை புரிந்திடில் நான் விடுவேனே
நின்று சினந்திடிலே அஞ்சிடுவேனே

சின்னஞ் சிறுவரென நினைத்து நீர்தானே
செய்த பிழைக்கு இங்கு திகைத்திடலேனே (சி)

சக்கு. வ-ம்:—செய்தது பிழையென்பதை யோசியாமல், அதிகமாக கோபித்துக்கொள்ளுகின்றீரே? சிறுவர்கள் விளையாடுவதைக் கண்டு சந்தோஷியாமல் வீணில் எங்களின் வீட்டை கலைத்து விட்டீரே இதுதானு பெரியோர்களுக் கழகு?

பிராமணர். வ-ம்:—அம்மணி! நீயோ வயதில் சிறியவள்தான், ஆனல், எம்போன்ற பெரியோர்களை இவ்விதம் சினப்பதால் நீ யடையப்போகும் பயன் யாது, தவிர உனைக்காணில் மிகவும், உத்தம தாய் தந்தையருக்கு ஜெனித்த புத்திரியாக தோற்றுகின்றாய் அப்படி யிருந்தும் இவ்விதமெலாம் பேசுவது,

## பிராமணர் தரு

ராமா சுகநாமா என்ற மெட்டு.

பல்லவி.

சரியோ இது நெரியோ நீ
சாற்றும் மொழியதிந்த பார்க்குள் ளடுத்திடுமோ (ச)

அநுபல்லவி.

சிறிய புத்தியினால் சினந்தெனை மிகவே
சீரியே தூஷிக்க லாமா இது
சேயிழையே அழகாமோ ஒன்றும்
அறியே னெந்தனை அவதூராய் ஏசுதல் (ச)

பிராமணர். வ-ம்:—யானே ஓர் ஏழை ப்ராமணன்! அதுவு! மன்னியில் யாத்திரைவாசி, ஏதோ பக்தி விஷயமாய் பகவானை துதித்துப் பாடிக்கொண்டு இவ்வழியாக வந்தேன், தவிர,

மேற்படி அநுபல்லவி தொடர்.

பலபேர்கள் சென்றிடும் பாதையில் நீங்கள்
பரிவுடனே விளையாட அதை
பாராது யானிங்கு நாட வீடு
கலைந்தாலே யது கபடமென் றுரைப்பது (ச)

பிராமணர். வ-ம்:—அம்மணி! யான் வேண்டுமெனை கலைக்கவில்லை, ஆதலால் நடந்தேரி விட்டதைப்பற்றி இவ்வேழை ப்ராமணன்மீது கோபிப்பதில் யாது பயன் தாயே?

சக்கு. வ-ம்:—ஐயா! என்ன தெரிவித்தீர், யாங்கள் சிறுமிகளென அறிந்திருந்தும், மணலினால் விளையாடிக்கொண்டிருந்த வீட்டை கலைத்ததுமன்றி ஏதேதோ தங்களுக்குத்தெரிந்த சட்ட கல்விகளையெல்லாம் படித்தால் விட்டுவிடுவேனென்று மதித்தீர்? அப்படிக்கொன்றும் நினைக்கவேண்டாம்.

## சக்குபாய் தரு.

தேடிவந்தேனே வள்ளிமானே என்றமெட்டு.

பல்லவி

விட்டிடேனுன்னை இனி பாரீர் கலைத்த
வீடதனைகட்டித் தாரீர் நீவிர் (வி)

மகுடங்கள்

வேகமாக வந்துநீ ரிங்கனம்
சோகமேயுற செய்ததினால் முனம் (வி)

விளையாடிட உளமது சகித்திட
திளையாளெனை தீதது புரிந்திட (வி)

அநுபல்லவி

விரட்டியுந்தனை வீண்விபரீதமே
மிரட்டி புரியவே மனமது தோணுமே (வி)

சரணம்

மட்டித்தன மாகுமோ
மனத்துயரம் போகுமோ
மாபிராமணா ரேயுனையே விடேன்
நேமன் ஷண்முக வேலனுரை மீரேன் (வி)

சக்கு. வ-ம்:—எவ்வளவு தான் தாங்கள் கள்ளக்கூச்சலிட்ட போதிலும் தங்களை யான் விடமுடியாது ஒழுங்குடன் பழைபபடி மணலினால் வீட்டைக்கட்டித்தந்தாலாச்சுது அல்லாவிடில் வீண் விபரீதத்திற் குள்ளாவீர்.

பிராமணர். வ-ம்:—அம்மணி! இவ்வளவு சிறுபிராயத்தில் உனக்கு இத்தகைய கோபமேற்காது. ஆகலால், வீணில் இந்த ஏழை பிராமணன் மீது கோபியாதீர்.

சக்கு. வ-ம்:—ஐயா! போகட்டும் என் வீட்டைக் கலைத்ததற்கு பதிலாக தங்களின் கரத்திலிருக்கும் தம்பூரையாவது தாருங்கள்.

பிராமணர். வ-ம்:—புத்தியில் மிகுந்த உம்போன்ற உத்தமச் சிறுமிகளுக்கு இதுபோல் வார்த்தையாடுதல் நன்கல்லவே ஐயோ!

## பிராமணர் தரு.

சரியல்லவே நீர் என்ற மெட்டு.

பல்லவி.

தன்மையிதல்ல தாயே உனக்கு இது
தருமோ தகாது கண்டாய் அம்மணியே (த)

அநுபல்லவி.

மண் வீடதை கலைத்த மார்க்கத்திற் காயெனது
தம்பூரை கேட்க லுற்றாய்
தானேன் துயர் மீளே னினி (த)

வீட்டை கலைத்தேனென்று வேதியனை யென்னை
வெகுண்டு நீ சீறி வைதால்
வாதே ஏசி டாதே சொன்னேன் (த)

பிராமணர். வ-ம்:—அம்மணி! மிகவும் புத்திசாலியாகத்தோன்றும் உனக்கு இச்செய்தி நியாயமாகாது, ஏனெனில் மணலினால் கட்டிய வீட்டை கலைத்து விட்டேனென்று அதற்காக என் கரத்தினிடமாக வைத்திருக்கும் தம்பூரைக் கேட்கின்றனையே உனது மணல் வீடு எனது தம்பூருக்கு இணையாகுமா?

சக்கு. வ-ம்:—ஐயா! தாங்கள் என்ன இப்படியெல்லாம் பாசாங்கு செய்தால் விட்டு விடுவேனெனும் கருத்தா? அப்படிக் கொன்றும் நினைக்கவேண்டாம் ஆதலால்,

தயவில்லாத தேன்ன வஞ்சம் என்ற மெட்டு.

பல்லவி.

பசப்பு வார்த்தைகள் செல்லாது வீணில்
பகட்டாதீ ரிப்போது என் வாது (ப)

அநுபல்லவி.

இசைந்து தம்பூரதை தருவீர்
இன்பமாகவே துன்ப மேகவே
யானே மனம் தானே களித்திடுவேன் (ப)

சரணம்

பாராதுபோல் வந்து விளையாட்டைக் கெடுத்தீர்
பரிவாய் கட்டிய வீட்டை பாதத்தால் மிதித்தீர்
தீராது கோபமினி பாரீர்
தீங்குகள் நேரும் பாங்குடன் பாரும்
தெரிவீரே அறி வுடையவரே (ப)

சக்கு. வ-ம்:—ஐயா! ஒழுங்குடன் தங்கள் கரத்தினிடமாக வைத்திருக்கும் தம்பூரை தந்தாலாச்சுது, அல்லாவிடில் வீணில் என்னிடம் அவமானமடைவீர்.

பிராமணர். வ-ம்:—அம்மணி! கோபியாதே,

பிராமணர் விருத்தம். இராகம்—பைரவி.

உந்தனின் கொள்கைபோல உத்தம மாதேயிந்த
விந்தைசேர் தம்பூர்தன்னை உரிமைபாய் உனக்கேதந்தேன்
சிந்தனை யின்றிநீயே சிரப்புட னிதையேபெற்று
சந்தோஷ மாகவாழ்வாய் சென்றுயான் வருவேன்தாயே.

பிராமணர். வ-ம்:—அம்மணி! இதோ உன் இஷ்டப்படியே இந்த தம்பூரை பெற்றுக்கொள்,

[சக்குபாய் தம்பூரைப் பெற்றுக்கொண்டு.]

சக்கு. வ-ப்:—ஐயா! தாங்கள் ஏதோ பக்தி விஷயமாய் பஜனைப் பாடிக்கொண்டு வந்ததில் பாராமல் தங்களின் மணல் வீட்டைக் கலைத்துவிட்டீர் அதின்பொருட்டு யான் கேட்டபடியே இந்த தம்பூரையும் தந்தீர் ஆனால் யான்,

85781

சக்குபாய் தரு

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது என்றமெட்டு.

பல்லவி

மண் வீட்டைக்கலைத்த மார்க்கத்தில் கயுனை
மனது கசிய வைதேன் (ம)

அநுபல்லவி

அன்பரே யதற்கா யளித்த தம்பூரை
அறியேன் அறியேன் மீட்ட வகையே (ம)

சரணம்.

மாசூயுடனிதை மாதுயென் செய்வது
மறையவரே யுரைப்பீர் இதை
தாசூயின்றி மீட்டும் தன்மையை யோதியே
தயங்காது சென்றிடுவீர்

ஆகூஷியுடன் மீட்டி யானேது செய்வதோ
அதனை வழுத்திடுவீர் அல்லால்
யானிதை வேண்டிலேன் ஐயா தாங்கள்
ஆனந்தமாய் கொண்டு செல்வீர் செல்வீர் (ம)

சக்கு. வ-ம்:—ஐயா! இந்த தம்பூரை யான் மீட்டும் வகையறிகிலேன், தவிர அதை மீட்டினாலும் என்னசெய்வது என்றும் தெரியவில்லை, அதன் மார்க்கத்தை எனக்குக் கற்பித்துச் சென்று வாருங்கள்.

பிராமணர். வ-ம்:—அம்மணி! தெரிவிக்கின்றேன்.

பிராமணர் விருத்தம். இராகம்—தன்யாசி.

இன்பமாய் தம்பூர்தன்னை இடக்கரமதனி லேந்தி
அன்புடன் வலக்கரத்தால் அன்னமே தந்திதன்னை
தென்புடன் சுருதிமீட்டு தினந்தினம் பக்தியோடு
பொன்மணி வண்ணன்தன்னை பூஜிப்பாய் பூஜிப்பாயே.

பிராமணர். வ-ம்:—அம்மணி! இந்த தம்பூரை அதிவினயத்துடன் உனது இடது கரத்தினிடமாக தாங்கி வலது கரத்தின் ஆள் காட்டி விரலினால் தந்தியை மீட்டி சகல உயிர்களுக்கும் தர்பரனாக விளங்காநின்ற அந்த பண்டரிநாதனை துதித்தேற்றுவாயேல், அதிசீக்கிரத்தில் உனக்கு கிருபை பாலித்தருள்வார் அதின்பொருட்டு இருதியில் உனதாவி பிரியும் காலையில், சாலோக பதவியிலும் மேலான பதவி கிடைக்கும்.

சக்கு. வ-ம்:—ஐயனே! தாங்களுரைத்ததில், தம்பூரை மீட்டும் விபரமறிந்தேன், அப்படி அறிந்தும், தாங்கள் தெரிவித்த பகவானென்பவர் யார், அவரது பெருமை யாது, அன்னவரை துதித்தேற்றுவது எவ்விதம் அதின் விபரங்களை யுரைத்தாலல்லவோ யான் அவ்விதம் நடந்துகொள்ளுவேன்.

பிராமணர். வ-ம்:—அம்மணி! அஞ்சாதே தெரிவிக்கின்றேன் கேள்.

## பிராமணர் தரு

சிவலோக நாதனைக் கண்டு என்றமெட்டு.

பல்லவி.

கோவிந்த முராரி யென்
கோதையே பணிவாய் நின்று (கோ)

அநுபல்லவி

சேவித்தால் வினை தீர்ப்பாரவர்
தீனனன வேணி சோதரன் (கோ

கோபமே நீ கைக்கொள்ளாதே கோரிக்கைதனைத் தள்ளாதே
ஆபத்துறவே துள்ளாதே யாரையும் நிந்தனைசொல்லாதே (கோ)

அம்மணி தம்பூரை மீட்டி ஆள்காட்டி விரல்சுழற்றி
தன்மையாய் மனதைநாட்டி தாயே நீயே சுருதிமீட்டி (கோ)

பிராமணர். வ-ம்:—அம்மணி! இந்த தம்பூரைமீட்டி, அந்த ஞான தீன ரக்ஷகனுகிய சர்வலோக சரண்யனை தினந்தினமும் தியானித்து துதித்தேற்றி யிரு யான் சென்று இன்னும் ஐந்து வருடம் கழித்து வருகின்றேன்.

சக்கு. வ-ம்:—சுவாமி! தெய்வ பக்தி யென்பதை சிறிதும் நினையாத இச்சேயிழையாளுக்கு பக்தியின் மார்க்கங்களை போதித்து இருதியில் ஐந்து வருடங் கழித்து வருவதாக தெரிவிக்கின்றீரே யான் இதற்கு என்ன செய்வது.

பிராமணர். வ-ம்:—அம்மணி! யானே யாத்திரைவாசி, இன்னும் பல க்ஷேத்திரங்களுக்கும் செல்லவேண்டியிருக்கின்றது, ஆகலால் என் மனக் கொள்கைப்படியே க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று பிறகு ஐந்து வருடங்கழித்து உனை வந்து காணுகின்றேன். அஞ்சாதே.

சக்கு. வ-ம்:—சுவாமி!

## சக்குபாய் கண்ணி

காந்தியோபரம ஏழை சன்யாசி என்றமெட்டு.

உனை பிரிந்தொரு க்ஷண மிருப்பேனோ
உத்தமரே உலகில் உயிர்தரிப்பேனோ
எனைவிட்டகல்வ துனக் கழகிதுதானோ
இவ்வடியாளின்மீது இறங்காததேனோ (உ)

விளையாடும் வழி வேகமாய் வந்தீர்
வீட்டைக் கலைத்து என்னல் வைதிட நொந்தீர்
நிலையதுபெற தம்பூரைத் தந்தீர்
நீலமேகனைப்போற்றும் வழியை யறைந்தீர் (உ)

சிறுவயதினில் கிருபைபாலித்து
சென்றுவருவே னென்றீர் சிரப்புடன் களித்து
உருகுதே உள்ளம் உயிரது தவித்து
உகந்த ஷண்முகவேலன் உரைமொழி பலித்து (உ)

சக்கு. வ-ம்:—சுவாமி! அறியாச் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த இவ்வடியாளுக்கு ஆன்றோராகிய தாங்கள் தோன்றி அவ்வாதிமூலனை துதித்தேற்றும் விதத்தையும் அதனுல்

அடையும் பலனையும் அறிவித்து ஐந்து வருடங்கழித்து தாங்கள் வருவதாக தெரிவிக்கின்றீரே, அதுவரையில் இச்சிறியாள் எவ்விதம் தங்களைக்காணாது காலங்கழிப்பேன் ஐயனே.

பிராமணர். வ-ப்:—அம்மணி! வருந்தாதே! அப்படியானால் உன்னிஷ்டப்படியே!

பிராமணர் விருத்தம். இராகம்-செஞ்சுருட்டி.

அன்னமே குழந்தாய் நீதான் அஞ்சாதே யானேஇன்னும்
இன்னமும் ஐந்துதிங்கள் இனிதுடன் சென்றபின்பு
உன்னைநான் வந்து காண்பேன் உண்மையே இந்தவார்த்தை
கண்ணீர்விட் டலறிடாதே காகுத்தன் கார்ப்பாரம்மா.

பிராமணர். வ-ப்:—குழந்தாய்! அஞ்சாதே இன்னும் ஐந்து மாதத்திற்குள்ளாக வந்து உன்னை காணுகிறேன். மாலைப்பொழுது வரப்போகின்றது உன்பெற்றோர்கள் உன்னைத்தேடுவார்கள் ஆதலால் சென்று உன் அரண்மனையில் இருப்பாய்.

சக்கு. வ-ம்:—ஐயா உண்மையில் வருவீரா அல்லது எனது வற்புருத்தலுக்கஞ்சி சாக்குப்போக்கு சொல்லுகின்றீரா?

பிராமணர். வ-ம்:—குழந்தாய்! அப்படிக்கொன்றும் நினையாதே ஐந்து திங்கள் சென்றதும் அவசியமாக உனைவந்து பார்க்கின்றேன். எனக்கும் அதிக காலஹரணமாகின்றது சீக்கிரம் விடைகொடு.

சக்கு. வ-ப்:—அப்படியானால் சென்றுவாருங்கள், தாங்கள் தெரிவித்ததை மறந்து விடப்போகின்றீர்கள்.

பிராமணர். வ-ம்:—அப்படிக்கொன்றும் மறவேன், யான் உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

[பிராமணர் போய்விடுகிறார், சக்குபாய் தனதரண்மனைக்குப்போகிறாள்.]

சீன்:—7.] இடம்:—அந்தபுரம்.

கதாநாயகர்:—சக்குபாய், கமலாபாய்.

[சக்குபாய் தனது அரண்மனையின் அந்தபுரத்தில் அமர்ந்து தம்பூரை மீட்டி பாடிக்கொண் டிருக்கின்றாள்.]

## சக்குபாய் தரு.

கார்த்திகேய காங்கேய என்றமெட்டு.

பல்லவி

கார்க்கவேதருணம் கருடன் மீது வருவாய்
கண்ணமணி வண்ணையன்ன (கா)

அநுபல்லவி

பார்க்கடல் சயன பத்மநாப கோபா
பாடி தினமுமுனை நாடி நின்றேனனை (கா)

சரணம்.

கொற்றவர் பஜிக்கும் கோபிகாரமண
கோகுலனே கோரியுனே யானும்
உற்றதுணை ஊர்தனில் யானறியேன்
உரை ஷண்முகனேநும் குறையது அகலவே (கா)

சக்கு. வ-ப்:—பக்தர்கள் தினமும் பணிந்தேற்றும் பரந்தாமா! அன்று பாழசுரர்களை பற்றருக்கும்பொருட்டு பத்தவதாரமெடுத்த பங்கய சீமா! பாதகனுகிய மாமன் கம்சனை பகைத்து வதைத்த பரமதயாளா! பாலூட்டிக் கொல்ல வந்த பூதகியின் பாலை யருந்திய பால கோபாலா! பஞ்சவர்களுக் கிரங்கி பாஞ்சாலிக்கு அன்று பங்க மடையாது வேண்டிய துயிலை யளித்த பாக்கிய சீலா! பாலன் துருவனை பாதுகார்த்த ஆதிமூலா! அடியேன் புஷ்பினியாகினேன், இனிமீது என் பெற்றோர் என்னை யாருக்கேனும் விவாகம்செய்து கொடுத்து விடுவார்களேயானுல் இப் பகவத் ஞானத்தை எவ்விதம் மறந்திருப்பேன், ஐயோ! பண்டரிபுரியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிரானின்ற புண்டலீகா! எனது கதியை நினைக்க நினைக்க உள்ளம் புண்படுகின்றதே, இனி எவ்விதம் சகித்திருப்பேன் யாவற்றிற்கும் நீயே அருள்புரியவேண்டும்.

[இதற்குள் கமலாபாய் வருகிருள்.]

கமலா. வ-ப்:—அடி! சக்கு! என்னடி இது? அடி பாழாப் போன மகளே!

## கமலாபாய் தரு

என்ன கேள்வி முறை என்ற மெட்டு.

பல்லவி.

என்னடி இது உனக்
கெந்த நேரமு மிந்த வீண்வாது (எ)

அநுபல்லவி

எங்கு யுக்தனின் பாங்கியர்களை நீங்கிவாடுராய் (எ)

சரணம்

தன்மையதனை நீ சற்றுமறியாமல்
தம்பூரதை மீட்டி தவித்துத்தெரியாமல்
பின்னம் புரியவே பாடிப்பாடிநேரில்
பினத்தித் திரிகின்றாய் பேயோடி உன்பேரில்

பிடித்துன்னை ஆட்டுதோடி
பேரின்பம் காட்டுதோடி
முடித்தேதுயர் மூட்டுதோடி
முனைந்தேயுனை வாட்டுதோடி

முனமேயுந்தனை மணமேசெய்திட தினமே வந்திருக்கு (எ)

கமலா, வ-ம்:—என்னடி; எப்பொழுது பார்த்தாலும் உனக்கு இதே வேலை தானா ? அது எந்த பாவியோ அந் தந்தபூரை கொடுத்து விட்டுப்போனாலும் போனான் கொஞ்சநேரமாவது அதைகீழே வைக்கமாட்டே னென்கின்றாயே, இதற்கு முன்னே தான் என்னமோ சிறியவளாக இருந்தாய் அப்பொழுது உன்னிஷ்டப்படி ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டு இருக்க விட்டுவைத்தேன், இப்பொழுது தான் நீ பருவபக்குவமடைந்து விட்டனையே, இப்பொழுதுமா இந்த இழவு, தவிர சிந்து தேசத்திலிருந்து ஏராளமான திரவிய சப்பத்துள்ள மாப்பிள்ளை ஒருவர் உன்னை வரிக்குப் பொருட்டு வந்திருக்கின்றார். நாளைக்கு முகூர்த்தம் வைத்திருக்கின்றோம், பின்பு மாமியார் வீட்டில் கூட இப்படி தான் செய்வாயோ ? சரி போகட்டும் வா உனது தந்தைபார் உனை அழைத்து வரும்படி எனை யனுப்பினார்.

[கமலாபாய் சக்குபாயை அழைத்துப் போகிறாள்.]

சீன்:—8.] [இடம்:—ஆலோசனை மண்டபம்.

கதாநாயகர்:—கங்காதரராவ், கமலாபாய், சக்குபாய்.

[கங்காதரராவ் அமர்ந்திருக்கின்றார் கமலாபாய் சக்குபாயை அழைத்து வருகிறாள்.]

சக்கு. வ-ம்:—பிதா ! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

கங்கா. வ-ப்:—குழந்தாய் ! ஆசீர்வாதம் எழுந்திரு

சக்கு. வ-ம்:—பிதா ! இவ்வடியாளை தாங்கள் அழைத்ததாக அம்மா அழைத்து வந்தார்கள், காரணம் யாது ?

கங்கா. வ-ப்:—குழந்தாய் ! தெரிவிக்கின்றேன் கேள்.

கங்காதரராவ் விருத்தம். இராகம்—காம்போதி.

உந்தனை வரிக்கவென்று உயரிய நகரமான
சிந்து தேசத்திருந்து சீமானும் ஒருவர்வந்தார்
அந்தமா யுனையவர்க்கு அன்புடன் மணம்செய்விக்க
இந்தநல் நேரந்தன்னில் இனிதுட னழைத்திட்டேனே.

கங்கா. வ-ம்:—இச் சங்கதி பற்றியே இங்கனம் உனையழைத்தேன், கண்மணி! கமலா! குழந்தைக்கு முகூர்த்த காலம் நெருங்கிவிட்டது, அதிசீக்கிரத்தில் நீராட்டி, ஆடையணிகளைம் பூட்டி அதிசீக்கிரத்தில் மணவரைப் பந்தலுக்கு அழைத்து வருவாய்.

கமலா. வ-ம்:—அப்படியே செய்கின்றேன் நாதா!

[கமலாபாய் சக்குபாயை அழைத்து போகிறாள்.]

சீன்:—9.] [இடம்:—மணவறை.

கதாநாயகர்:— கங்காதரராவ், கமலாபாய், மித்துருராவ், சக்குபாய், மற்றும் பந்துமித்திரர்கள், புரோகிதர் முதலானோர்.

[மேளவாத்தியம் முழங்க சக்குபாயிக்கும் மித்ருராவுக்கும் விவாகம் நடக்கின்றது மித்ருராவ் சக்குபாயிக்கு மாங்கல்யம் தரிக்கின்றார்.]

மித்ருராவ் தரு

பூங்கா விநோதமே என்ற மெட்டு.

பல்லவி.

மாங்கல்யம் சூட்டினேன்
மணமகளா மிவள்தனை (மா)

சரணங்கள்.

மனமாரத் தினமே நல் குணமுள
தனமே சேர் என தவிக் கினிபுடன் (மா)

மங்கும் தங்கம் இவள் குணம்
எங்கும் பொங்கும் ரதிதனை (மா)

மாதா பிதாகுரு சதா தெய்வமென
வாதேதிலாதஇம் மாதற்கரசியை (மா)

அநுபல்லவி

தேங்காது இந்தவேளை
தேவரும் மூவரும் யாவரு மறிந்திட (மா)

சரணம்

பாங்கான நாகசுரம்
பற்பல விதமாய் அற்புதம் பாட
பாண்டு வாத்தியங்களும்
பாடியே தாசிகள் பரிவுடனாட
ஓங்கிட வேதியர் ஓமம் வளர்த்த நல்ல
உத்தமன் ஷண்முகன் முத்தமிழோத
உரியோர் சேவைகளிட (மா)

[மித்ருராவ் சக்குபாயிக்கு மாங்கல்யம் தரிக்கின்றார் அனைவரும் விருந்துண்டு செல்கின்றனர்.

சீன்:—10.] [இடம்:—அரண்மனை.

கதாநாயகர்:—சக்குபாய், மித்ருராவ், கங்காதரராவ், கமலாபாய், முதலானோர்.

[அரண்மனையின் ஓர் புரத்தில் சக்குபாய் அமர்ந்து பாடிக்கொண்டிருக்கின்றாள்.]

சக்குபாய் தரு.

சிதம்பரம் போகாமலிருப்பேனோ என்றமெட்டு.

பல்லவி

இதுஉனக்கழகோ பரந்தாமா யென்னை
இல்லறத்தி லீடாக்கலாமா (இ)

அநுபல்லவி

சதியிது வாகுமே சம்சாரத் தொல்லை
கதியினி வேறெனக் காருமே இல்லை (இ)

பெற்றவ ரெந்தனை பெரிதும் பாராது
பற்றா நல்மணம் புரிந்தா ரிப்போது (இ)

உந்தனை கண்டிடா உயிரது ஏனோ
சிந்தனை யாகுதே சரியிது தானோ (இ)

வேதியர் கூறிய வார்த்தையும் பொய்யோ
நீதிசேர் ஷண்முகன் நிகழ்த்திய தையோ (இ)

சக்கு. வ-ப்:—சதா உனது பக்தியின் காரணமாகி நின்ற ப்ரஹ்லாதனுக்காய், சண்டாள ஹிரண்ய கசிபுவை சித்ரவதைபுரியும்பொருட்டு சிங்கமுகத்துடன் தூணில் தோன்றிய நரசிங்க ரூபா! ஆயர்பாடியில் ஆடுகளை மேய்த்தும், ஆதவர்களை அனேக விதத்தில் கேளிக்கை புரிந்தும், பன்னீராயிரம் கோபியர்களை லீலாவினோதம் புரிந்த ஆதி சொரூபா! கோகுலர்களுக்கு தனது மகிமையைக்காட்டும்பொருட்டு கோவர்த்தனகிரியை குடையாகப் பிடித்த நந்த கோபாலா! இவ்வடியாள் உன் மார்க்கமொன்றுமறியாது என் தோழியர்களுடன் சில நாளைக்குமுன் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருக்கும் சமயம் அவ்வீட்டைக் கலைத்த மறையவரின் மொழியினலல்லவோ மஹானுபாவனுகிய உமது மாகூஷிமைகளை மனதாரக் கேட்டறிந்தேன், அவ்விதமறிந்தும் உனை சதா துதித் தேற்றியிருந்த என்னை இச் சம்சார சாகரத்தில் ஆழ்ந்தச் செய்யவென் தந்தை தாய் கங்கணங் கட்டிக்கொண்டார்களே! இனி யான் உனை பூசிப்பது எவ்விதமோ தெரிகிலேனே? எனை வரித்த மஹானுபாவர் என் மனக்கொள்கைபோ லீடுயடுவாரோ அல்லால் வேறுவிதமான பாசபந்தங்களைச் சுமத்திக்கொள்வாரோ ஒன்றும் தெரியவில்லையே; இப்படியும் ஒரு பெண்பாலை வீண் சோதனைபுரியலாகுமா? இதுவனைத்தும் உம்போன்றவர்களுக்கு நீதியாகுமா ஹா!

[இதற்குள் மித்ருராவ் வருகிறார்.]

மித்ருராவ். வ-ப்:—பெண்ணே! சக்குபா! என்ன இப்படி முகவாட்டத்துடன் அமர்ந்திருக்கின்றாய்? போகட்டும் நான் உனை வரிக்கும்பொருட்டு இந் நகரையடைந்து அனேக நாட்களாகின்றது. ஆதலால் நமது நாடாகிய சிந்து தேசத்திற்கு,

## மித்ருராவ் தரு

காதல்கொண்டேன் கண்ணியனே என்ற மெட்டு

பல்லவி.

வாருமடி போய்வருவோம் வனமயிலே
வாழ்க்கை சுகமே பெருவோம் வருத்தமின்றி (வா)

அநுபல்லவி

வஞ்சமோ அஞ்சுகமே யப ரஞ்சியே சஞ்சலமேனினி (வா)

மகுடங்கள்

வா துத்தா னே துக்கோ கண்மணி
நீதித்தா னல்லடி பெண்மணி (வா)
வரித்த யெனக்கு உரித்த மடைந்த
பொருத்த மனைத்தும் தரித்த காதலி (வா)

தொகையறு

வளமாக யெனையீன்று வளர்த்த தாய்தந்தையரை
விட்டு வந்தேன்
உளமே களிக்கவே உந்தனை மணர்ந்திட
உகந்து யானே
தளராது தாய்தந்தை தன்னையான் கண்டிட
செல்ல வேண்டும்
இளமானே உந்தனை யீன்றோர்க ளிடத்தில்விடை
ஏற்று வாராய்

சரணம்

வார்த்தைதனை மறுக்காதே—மன—பூர்த்தியதை வெருக்காதே
வருவோமென யெர் வழிதனை பார்த்து
வருந்தியே பெற்றோர் இருப்பன ரார்த்து
வர்மமேன் மானே இது தர்மமோ தானே
வகையாய் ஷண்முக வேலனின் மொழியே
நிகழப் பாடுவோம் நேர்த்தியாய் தோழியே (வா)

மித்ருராவ். வ-ம்:—எனதாருயிர்க் காதலி! நான் வந்து அதிக நாளாகின்றது, எனை யீன்ற தாய்தந்தையர் என் வரவை எதிர்நோக்கியவண்ணமாக பார்த்திருப்பார்கள், ஆதலால் சீக்கிரத்தில் உன் தாய் தந்தையரிடம் விடைபெற்று வா செல்வோம்.

[இதற்குள் கங்காதரராவ் வருகிறார்.]

சக்கு. வ-ம்:—பிதா! நமஸ்கரிக்கின்றேன்.

மித்ரு. வ-ம்:—மாமா அடியேன் நமஸ்காரம்.

கங்காதர. வ-ம்:—மருகரே! அம்மா குழந்தாய் சக்குபா! ஆசிர்வாதம் எழுந்திருங்கள்.

சக்கு. வ-ம்:—பிதா ! சிலர் நமது நாட்டிற்கு வந்து அதிக நாளாகின்றதாம், ஆதலால் இவரது நாட்டிற்கு போகவேண்டுமோம் எனையும் அழைக்கின்றார் தந்தையே.

கங்கா. வ-ம்:—குழந்தாய் ! சந்தோஷம், என்றைக்கிருப்பினும் தாய் தந்தையரில்லம் உசித்தமாகாது, உனது கணவனின் இல்லமே உனக்கு உரித்தம் ஆதலால் உனது நாதன் அழைக்குங்கால் அன்னவருக்கு யாதும் மறுப்பு கூராமல் அன்னவருடன்.

## கங்காதரராவ் தரு.

ஆலோலமேன்று கூவினள் என்றமெட்டு.

பல்லவி

சென்று வருவாய் குழந்தாய் சிறப்புனே
சென்று வருவாய் குழந்தாய் சந்தோஷமாக (செ)

அநுபல்லவி

இன்று உன்நாதனுடன் ஏகிடுவாய் செழிக்க
இங்கிர்தமான இல்லற சுகமே
மங்கைபற் கழகு மகிழ்வுறவகமே (செ)

சரணம்

சொல்தவராது நடப்பாய்—உனது நாதன்
சோர்வடையாது இருப்பாய்
நாதனே தெய்வ மென்றுநீ மனதினில்
சோதனையின்றி சீருடன் வாழ்கவே (செ)

கங்கா. வ-ம்:—குழந்தாய் ! யான் உனக்கு ஒன்றும் அதிகமாக சொல்லவேண்டியதில்லை, ஆதலால் உன்கணவனின் கருத்துபடியே நடந்துக்கொள்.

மித்ரு. வ-ம்:—மாமா ! யான் வந்து நாள் அதிகரிக்கின்றது, ஆதலால் அடியேன் மனைவியுடன் எனது நகருக்குச்செல்ல உத்திரவு தாருங்கள்.

கங்கா. வ-ம்:—பெண்ணே ! கமலா !

[கமலாபாய் வருகிறாள்.]

கமலா. வ-ம்:—என் நாதா !

கங்கா. வ-ம்:—கண்மணி ! நமது மருமகர் வந்து அதிக நாளாகி விட்டதாம், ஆதலால் நீ நமது குழந்தையுடன் சிந்து தேசத்திற்குச்

சென்று, நமது குழந்தை தைரியப்பட தேருதலுரைத்து வருவாய்.

கமலா. வ-ப்:—அப்படி ப்ராணபதி! குழந்தாய் வாசெல்வோம்.

சக்கு. வ-ம்:—பிதா ! சென்று வருகட்டுமா ?

கங்காதர. வ-ம்:—குழந்தாய் ! அஞ்சாதே சென்றுவா !

[அனைவரும் போகின்றனர்.]

சீன்:—11.] [இடம்:—கூடம்.

கதாநாயகர்:—விமலாபாய், சக்குபாய்.

[சக்குபாய் கூடத்தில் இயந்திரத்தின் முன் அமர்ந்து பகவானை துதிக்கிறாள்.

சக்கு. வ-ப்:—பக்தகோடிகளின் வினையை பற்றறுக்கும் பரம புருஷா! அண்ட சராசரங்களும் அதிர நடுங்கக்கூடிய சக்தியை யளிக்கும் ஆதி நாராயணா! பூமாதேவியின் புலம்புகைக் கிரங்கி பாதக ஹிரண்யாக்ஷகனை வராக ரூபத்துடன் சமுத்திற்குள்புகுந்து தும்சம் புரிந்த துளபமார்பா! தங்கையாகிய துரௌபதையின் துயருக்கிரங்கிய துவாரகாபுரியின் வாசா! இவ்வடியாளின் துயரை ஏதெனப்புகலுவேன்; ஐயோ! எனையீன்ற அன்னை தந்தையர்களிருந்தும் எனை இத்தகைய பாசபந்தத்தி லீடுபடுத்தினார்களே! இதை பற்றறுக்க வேறு மார்க்கம் ஒன்றும் விளங்கவில்லையே! இவ்வடியாளுக்கு உனது திவ்ய தரிசனத்தை காணவென்று ஆவல் மிகுக்கின்றதே இப் பாதகி உனை எத் தருணத்தில் கண்டானந்திக்கப்போகின்றேன், ஹா ! ஐயனே ! மெய்யனே ! ஆழிதங்கிடும் கையனே !

சக்குபாய் தரு.

பாடிப்பாடி உன்பாதத்தை காணேனே என்ற மெட்டு.

நந்தகோவிந்த வைகுந்த சீலா உனை
நம்பி நின்றேன் கோகுலா மூலா (ந)
தந்தைதாய் தன்னைவிட்டு தவித்தேனே வரம்
தந்திடவேயான் கரம் குவித்தேனே நல்ல
தாரக நாமனே
தன்யனே புண்யனே மண்ணதை யுண்டோனே
அந்தரதேவர்க் கதிகாரனே இந்த
அகில அவதாரனே யானே (ந)

பொல்லாப்பிறவிதனை எடுத்தேனே இந்த
பூமிதனக்குதுயர் கொடுத்தேனே இப்
பூங்கொடியாளுனை
நம்பினேன் ஷண்முகன் செந்தமிழ் போல்தானே
நில்லாதென்னுவி ஆதிமூலனே துஷ்ட
நிக்ரஹ கோபாலனே சீமானே (௩)

சக்கு. வ-ம்:—ஆ! அகிலரக்ஷகா! இப்பிறவி எடுத்து வெகு சிறப்புடனிருந்தஇவ்வடியேன்உனது திருநாமத்தை போதித்த அந்த அந்தணர் ஐந்து மாதத்திற்குள் வருவதாக தெரிவித்துச்சென்றும் ஐந்து வருடங்களாகப்போகின்றது இது வரையிலும் அன்னவர்வரவில்லை, ஒருவேளை வந்திருப்பினும் எனது தந்தை தாயின் இல்லத்தில் அன்னவருக்குயார் தகுந்த விடையளித் திருக்கப்போகின்றன. ஐயோ! பக்தர்களுக்கிரங்கும் பரம புருஷா! இப்பாலகிமீது இன்னும் உனக்கென்ன வஞ்சமோ? வீணில் இவ்விதமே கூக்குறலிட்டு எனது வாழ் நாளை வீண்ணுலாககழிப்பது உனக்கு நீதியாகுமா? ஆ! விதியே! விதியே!

[இதற்குள் விமலாபாய் வருகிறாள்.]

விமலா. வ-ம்:—அடி! பாவி மகளே! என்னடி உனக்கு வந்த கேடு காலம், என்னேரம் பார்த்தாலும் இவள் இப்படியே பாடிக் கொண்டிருக்கிறாளே? உலகில் எவ்வளவோ புத்தியில் மிகுந்தபெண்களெல்லாமிருக்க இந்த ஊரிலிருக்கும் பெண்களெல்லாம் உதவாது என்று ஊரைவிட்டு காட்டைவிட்டு எங்கேயோ போய் என்மகன் இந்த குட்டிச்சுவரைக்கொண்டு வந்தானே; ஐயோ! தெய்வமே!

## விமலா தரு.

தாஜ ராஜ ராஜ ராஜ என்றமெட்டு.

இந்தபாவி தன்னைமகன் ஏன்மணர்ந்தானோ-இவள்
ஏதேதோ பினத்தி வாதே புரிகின்றாள் இவள் வீட்டில் ஏனோ
தந்திரமாகவே பொருளெலாம் இவளிட
தகப்பன் வாங்கிக்கொண்டான்
தைரியமாகவே தருவதாய் மகள்தனை
தட்டிபரித்துண்டான்
எந்தநேரமும் பினத்திதிரிகிறாள் இவளென்ன ராக்ஷசியோ
என்மகன் உயிர்தனை கொன்றிட வந்ததோர் இடும்புள பூதகியோ

நிந்தனை யுரிய சொந்தமோடு வந்தி
நாசகாலி யாச்சே மகன்
யோசனையும் போச்சே பலர்
ஏசவும் நாளாச்சே ஐயோ (இ)

விமலா. வ-ப்:—இந்த பைத்தியம் பிடித்த பெண்ணை வைத்துக்கொண்டு இவளின் தகப்பன் ஆனமட்டும் என் மகனிடம் பொருள்களை அபகரித்துக் கொண்டதுமல்லாமல் இந்த சனியனை என் மகனின் காலில் கட்டிவைத்தான். இதற்கென்ன செய்வது, (சக்குபாயை நோக்கி) அடி! பேஷ்! பேஷ்! உனது வேடிக்கை மிகவே நன்ருக இருக்கின்றது, என்னடி இது வீட்டு வேலைகளை செய்யாமல், போனுல் போன இடம் வந்தால் வந்த இடம், நின்ருல் நின்ற இடமாக இருந்தால் எல்லாம் நடந்துவிடும் நாம் மினுக்கிக் கொண்டும் குலுக்கிக்கொண்டு மிருக்கலாமென்று நினைத்துக்கொண்டனைபோலும், உன்னை இந்த கேழ்வரகை அரைக்கும்படிச்சொல்லி என்னேரப் பொழுதானது இதுவரையிலும் என்ன செய்துக்கொண்டிருந்தாய்?

சக்கு. வ-ம்:—மாமி! யானிதுவரையிலும் எப்பொழுதுமே அரைத்ததில்லை இப்போது திடீரென இதை அரைக்கும்படி தெரிவித்தால் யானெப்படி அரைப்பது, அரைக்கும் விதத்தைக் காட்டினுலல்லவோ அரைப்பேன்.

விமலா. வ-ம்:—என்ன என்ன இது தெரியாதா? தின்னமாத்திரம் தெரியுமா? ஏது, காலை நீட்டிக்கொண்டு பைத்தியக்காரிபோல் வாயில் வந்ததெல்லாம் ஏதேதோ உளரிக்கொண்டும் வேளைக்கு வேளை சாப்பிட்டுக்கொண்டுந் திரிந்துவரலாமென்று நினைந்துக்கொண்டனையா? வரட்டும் உன் மாப்பிள்ளை இந்த நியாயத்தை சொல்லிப் பார்க்கலாம்.

சக்கு. வ-ம்:—மாமி! இவ் வடியேன்மீதில் கோபித்தால் யாது பயன் வேலை செய்யும் விதத்தை காட்டினுலல்லவோ செய்வேன்.

விமலா. வ-ப்:—சரி போகட்டும், வீட்டினுள் உரையில் நெல்லிருக்கின்றது அதையாவது கொஞ்சமெடுத்து குத்தி நல்லவிதமாக அரிசியை புடைத்து எடு.

சக்கு. வ-ப்:—அப்படியே தங்களின் சித்தப்படியே செய்கின்றேன்.

[விமலாபாய் ஒருபுரமும் சக்குபாய் ஒருபுரமும் போகிருர்கள்.]

சீன்:—12.] [இடம்:—சயனக்ஹறம்.

கதாநாயகர்:—மித்ருராவ், சக்குபாய்.

[சக்குபாய் சயனக்ரஹறத்தில் பஞ்சணை மீது ஓர் புரம் அமர்ந்திருக்கின்ருள், மித்ருராவ் வருகிருர்.]

மித்ரு. வ-ம்:—பெண்ணே! சக்குபா! என்ன ஒருவிதமுக வாட்டங்கொண்டு அமர்ந்திருக்கின்ருய், உனக்கேது குறை நீ வேண்டும் பொருளனைத்தும் அப்போதுக்கப்போது தருவித்துத்தரயானிருக்கும் வரையில் உனக்கு யாது சஞ்சலமிருக்கின்றது.

சக்கு. வ-ம்:—ப்ராணபதி! வேரொன்றுமில்லை, தங்களின் தாயார் என்னை கேழ்வரகரைக்கும்படி தெரிவித்தனர், இவ்வடியாளுக்கு அதின் விபரம் தெரியாது தவித்திருக்கக்கண்டு பலவிதமாக வைதனர் அதின்பொருட்டே, மனது ஒருவிதசஞ்சலத்திலாழ்ந்தச்செய்கின்றது.

மித்ரு. வ-ம்:—அந்த கிழவிக்கு எப்பொழுது பார்த்தாலும் இதே தொழிலாக இருக்கின்றது. ஆகட்டும் நாளையகாலையில் நான் அவளைகண்டிக்கின்றேன் உன்மனதில் ஒன்றும் சஞ்சலங்கொள்ளாதே போகட்டும்.

## மித்ருராவ் தரு.

சிங்காரி ஒய்யாரி என்றமெட்டு.

பல்லவி

சையோக கெம்பீரி (சை)

அநுபல்லவி

சரசமதுபுரிய திரஸ்கரிக்காதே யெந்தன் (சை)

மகுடங்கள்

சோதனையே செய்யாதே
காதலியே கடுமனதுடன் (சை)
சிரித்து உனதுளமே களித்து முத்தந்தரவே
உரித்தமுளநேரமே பொருத்தமதை மீராதே (சை)
சேயிழையே இனுமே யெணையே புணா
ராதெனை நாளையே தான் கழியாதடி (சை)

சரணம்

வைபோகமாயிருக்க வசந்த நல்காலமே
வனமயிலே நமது வாழ்க்கையின் கோலமே

மெய்யா யுனைவிரும்பி மணர்ந்தனன் கோகிலமே
மர்மமாகுமோ மயிலே இது சமயம்
மையல் தணிய குயிலே சதிபுரிந்தால்
வந்திடுமே துயர் ஷண்முக வேலனின்
செந்தமிழோதினேன் சிந்தை கனிந்திட (சை)

மித்ரு. வ-ம்:—கண்மணி! உனை வரித்த இதுநாள் வரை ஒரு நாளேனும் என் விஷயத்தி லிறக்கம் வைத்து எனது கொள்கைக்கு ஈடுபட்டேனென மறுத்து மௌனம் சாதித்திருந்தால் நமது வாழ்நாளனைத்தும் போவதெவ்விதம், யாரும் பகவனை துதிக்கவேண்டியது தான் ஆனால், சமய சந்தர்ப்பங்களில்லையா? வேண்டாம், எல்லாம் சிற்றின்பத்திலேயே அடங்கியிருக்கின்றது, சிற்றின்பத்தின் சூழ்ச்சியை சிறிதும் அறியாமல் பேரின்பத்திலாழ்ந்தினால் யாதும் பயன் படாது, இதை நீ உள்ளத்தில் பதித்துக்கொள். வா சீக்கிரம் ஏன் மௌனம் சாதிக்கின்றாய்?

[சக்குபாய் தலைகுனிந்து மௌனமாக இருக்கிறாள்.]

மித்ரு; வ-ம்:—(தனி) போகட்டும், புதிய பெண்ணல்லவா! நாளையதினம் ஒருவேளை நாமக் கிசையலாம், ஆயினும் இவளை அதிகம் வர்ப்புருத்துருவதில் பயனில்லை. பெண்ணே! சக்குபா! நாளையதினம் பார்த்துக்கொள்ளலாம் யான் சென்று வருகிறேன்.

சக்கு. வ-ம்:—அப்படியே சென்று வாருங்கள் நாதா!

[மித்ருராவ் போகிறார் சக்குபாய் தனியாக அமர்ந்து பகவானை நிந்திக்கின்றாள்.]

சக்கு. வ-ம்:—ஐயோ! ஆதியில் அயோத்தியாபுரியில் தசரதச் சக்கரவர்த்திக்கு அருஞ்சுதனாக அவதரித்த ஆனந்த ராமா! அன்னையாகிய சீதாபிராட்டிக்காக அரிய சிவதனுசை யொடித்த ஜானகி ராமா! அகலிகையின் சாபத்தை விமோசனித்த அருள்மிகும் ராமா! அகங்கொண்ட தாடகையை வதைத்து, அழைத்துச்சென்ற கௌசிகரின் யாகத்தை பூர்த்தி செய்த அதிபலராமா! அந்தணர்குல பரசுராமனின் அகம்பாவத்தை யொழித்த அயோத்தி ராமா! அரசுபுரிவதைவிட அன்னையின் வாக்கியமே மேலாகக்கொண்டு ஆரண்யஞ் சென்று அனுமந்தனின் சகாயத்தினால் அதிபல இராவணாதியர்களை அடியோடு பற்றறுத்து அயோத்தியை அடைந்து அரிய செங்கோல் செலுத்திய அரிராமா இவ்வடியாள் படுந்துயரம் உனதிரு செவிக்கு கேட்கவில்லையா? யான் உனது திவ்ய தரிசனத்தைக் காணவும்

உன்னால் மேலான பதவியை அடையலாமென்றல்லவோ நினைந்திருந்தேன். நினைந்த நினைவிற்கு மனந்தாளாமல் இந்த மார்க்கத்திலீடு படுத்தினது உனது தெய்வாம்சத்திற்கு நீதியாக தெரிகின்றதா? ஐயோ!

## சக்குபாய் தரு.

எதிகேதிநாகு ரங்கா என்றமெட்டு.

பல்லவி

சரியோ இது ராமா
சீமா பூமா (ச)

அநுபல்லவி

சாக்ஷாத் பண்டரி க்ஷேத்ர விலாசா
சதியோ நிதியோ சாதித்த விதியோ (ச)

சரணம்

அரியாவயதில் ஆவல்கொண்டேனே
அச்சுதா உனதரு ளடிமையான் தானே
முறியாயிங்கு முழித்து நின்றேனே
முத்தமிழ் ஷண்முகன் மொழிந்த பூமானே (ச)

சக்கு. வ-ம்:—ஒருபுரம் எனது மாமியார் பலவிதமான வேலைகளைச்செய்யும்படி வைகின்றாள், ஒருபுரம் எனது நாதன் அன்னவரின் கலவிக்கிசையும் பொருட்டு அழைக்கின்றார். எனதுள்ளமோ உனது திவ்விய தரிசனத்தை கருதுகின்றது. ஏ! பரமாத்மா! தஞ்சமென அடைந்தவரையும் இவ்விதம் தவிக்கச்செய்யலாமா? உனைநம்பிய ஒருவரும் நாசமடைந்ததாக இதுவரையில் யான் கேள்வியுற்றதில்லையே? அவ்விதமிருக்க எனை மாத்திரம் நீ ரிப்படி வருத்துதற்கு காரணம் யாது, தாங்கள் இவ்விதமே தாமதம் புரிவீரேல், வீணில் யான் மடிவேனென்பதில் சந்தேகமில்லை, ஆயினும் சயனித்துக்கொள்கிறேன். உனது கருணை எனை எவ்வழியில் விடினும் விடட்டும்.

[சயனித்துக்கொள்கிறாள்.]

சீன்:—13.] [இடம்:—விமலாபாய் அந்தபுரம்.

கதாநாயகர்:—மித்ருராவ், விமலாபாய்.

[மித்ருராவ் வருகிறார்.]

மித்ரு. வ-ப்:—தாயே! தாயே! எங்கிருக்கின்றீர்?

விமலா. வ-ம்:—ஏண்டா! எப்பா! என்ன சேதிகொண்டு வந்துவிட்டாய்?

மித்ரு. வ-ம்:—அம்மணி! ஏனிப்படி கோபித்துக்கொள்ளுகின்றீர்? போகட்டும் அந்த பெண்ணை ஏனம்மா வீணில் வைகின்றீராமே? அவள் இப்பொழுதுதானே வாழ்க்கைப்பட்டாள் இனிமேதல்லவோ வேலைகளையெல்லாம் செய்ய கற்றுக்கொள்ளவேண்டும்.

விமலா. வ-ம்:—ஏண்டா! பெண்சாதி பேச்சை கேட்டுக்கொண்டா என்னிடம் சண்டையிட வந்தாய்? ஆமாம், வேலைதான் செய்ய தெரியவில்லையென்றால், போடும் சோற்றை தின்றுவிட்டு வேலைகளை கற்றுக்கொள்ளாமல் பைத்தியக்காரிபோல் உளறிக்கொண்டு இருந்தால் நான் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமா?

மித்ரு. வ-ம்:—யானும் அதுபற்றிதான் கவனிக்கின்றேன், பெண்ணோ மிகவும் சாது, நல்ல புத்திசாலிதான், அழகிலும் நிகரில்லாதவள், ஆனால் வாயில் வந்தபடியெல்லாம் பினத்தித் திரிவதால்தான் எனக்கும் ஒருவித சந்தேகம் ஏற்படுகின்றது அது என்னவாக இருக்கும்.

விமலா. வ-ம்:—இதையும் கேட்க வேண்டுமா? நீதான் உன்னிஷ்டப்படியே எங்களின் உத்திரவை எதிர்பாராமல் எங்கேயோ சென்று பேய்பிடித்தவளை கொண்டுவந்து விட்டாயே?

மித்ரு. வ-ம்:—அப்படியுமிருக்கலாம் ஆனால்,

மித்ருராவ் விருத்தம். இராகம்—பைரவி.

அன்புள்ள எனதுதாயே அம்மங்கை செய்வதெல்லாம்
துன்மார்க்க செய்கையான தொல்லையே விளைப்பதாலே
இன்புர நமதுநாட்டில் இருக்கும் பூஜாலிதன்னை
பின்னமில்லாது கொண்டு பேய்தனை ஒட்டுவேனே.

மித்ரு. வ-ம்:—இன்றைக்கே சென்று இவ்வூரிலுள்ள பூஜாலிகளை தருவித்து, அம்மங்கைமீதுள்ள பேய்களை ஒட்டி உனது மனம்போல் நடந்துக்கொள்ளச் செய்கின்றேன்.

[மித்ருராவ் போகிறார்.]

சீன்:—14.] [இடம்:—கூடம்.

கதாநாயகர்:—பூஜாலிகள், சக்குபாய், மித்துருராவ்.

[பூஜாலிகள், சக்குபாயை குந்தவைத்து உடுக்கை யடிக்கின்றார்கள்.]

## பூஜாலிகள் வர்ணிப்பு

சித்திபுத்தி நாயகரே — செல்வக் கணபதியே
முத்திக்கு முதற்பொருளே — மூஷிகரே வந்தமரும்
ஆதி சுடரொளியே — ஆதிசிவன் கைக்கிளியே
ஜோதி சுடரொளியே — சூலபாணி தேவியரே
வாருமம்மா மாதாவே இந்த — வழக்கதனை பற்றருக்க
பாருமம்மா பாதகனை இங்கே — பிடித்துவந்து தள்ளுமம்மா
வாடாமுனி நாதா — வல்லவனே ராஜாவே
சாமி முனிநாதா — சற்குருவே வாருமையா
நடந்துமே போகையிலே — துடர்ந்துவந்த பேய்முனியே
நீ-யாருடைய சீர்மகனே — அரியாத பாலகனே
தாய்க்கு தலைமகனே — தலைவலியால் மாண்டவனே
அழகில் சிறந்தவனே — ஆண்மையிலே உயர்ந்தவனே
தவத்தில் பெரியவனே — தன்மையிலே சிறந்தவனே
வயிற்றுவலி கண்டவனே நீ — வெட்டுபட்டு மடிந்தவனே
சண்டையில் மடிந்தவனே — சன்யாசி யானவனே
மந்திரங்கள் கற்றவனே — மாயமறிந்தவனே
குளத்திலே கால் தவரி — குதித்து உயிர்விட்டவனே
ஓடி வாடா ஓடிவாடா — ஓங்கார சத்தமிட்டு
ஜாடுமம்மா ஜாட்டியாலே — தாயே பகவதியே
இவனை-குதிரைகட்டும் சங்கிலியால் — கட்டிவந்து தள்ளுமம்மா
சூலத்தால் குத்துமம்மா — சண்டாள ராக்ஷதனை
எட்டியுதையுமம்மா இவனை — இழுத்துவந்து தள்ளுமம்மா

### ஷை மெட்டு சுருள்

அபயம் சிவனேயென்று — அழுதுவரச் செய்யுமம்மா
போறேன் சிவனேயென்று — புலம்பி தவிக்கானே
இவனுக்கு-கட்டுசோறு — கட்டணுமே கட்டணுமே
கடும்பழணம் — கூட்டணுமே கூட்டணுமே
இவனுக்கு-போக்குசோறு — கட்டணுமே கட்டணுமே
பெரும்பழணம் — கூட்டணுமே கூட்டணுமே
உன்-பெயரும் — விளங்கணுமே விளங்கணுமே
இவர்கள்-பெரியகுடி — யாகணுமே யாகணுமே

இவள் முடிமேலே நீயிருந்து நீயிருந்து
முத்துமழை பொழியணுமே பொழியணுமே

[இதற்குள் மித்துருராவ் வருகிறார்.]

மித்ரு. வ-ம்:—என்னடா பயல்களே! உங்கள் பாட்டுக்கு நீங்கள் பாடிக்கொண்டிருக்கின்றீர்கள். இவள் பாட்டுக்கு அப்படி பதுமைபோல் குந்திக்கொண்டிருக்கின்றாள். சட்

போம்போ மிதுவுங்கனமா என்றமெட்டு.

பல்லவி

ஜெகதலப் புரட்டர்களே—உங்களுள்
சித்தெல்லாமறிவேன் போங்களே (ஜெ)

அநுபல்லவி

பகட்டிபொருள் பரிக்க பாதகரே வந்திட்டீரே
அகத்தை யழித்திடுவேன் அகல்வீர் அசல்வீரடா (ஜெ)

சரணம்

செம்பதை கவிழ்த்துவைத்து திரியுடன் விளக்கொன்றை
தீவிரமாய் கொளுத்தி வைத்தீர் பின்னும்
வம்புள்ளபேயெனவே வார்த்தை பகட்டிகாசை
வாங்கி இத்தனை நாளாய் தின்றீர்
சும்மா உடுக்கைதனை சுருப்புடனே தட்டி
அம்மா அப்பாயென்று அழைக்க வந்திட்டீரோடா (ஜெ)

[மித்துருராவ் பூஜாலிகளை அடிக்க பூஜாலிகள் ஓடிவிடுகிறார்கள்.]

மித்ரு. வ-ம்:—ஐயோ! என்ன செய்வேன், அளவிலாத அழகு வாய்ந்த பெண்பால், இவ்விதமான ஆபத்துக்குள்ளடங்கி அவதியுருகின்றாளே என்ன செய்யலாம், அடுத்த வீதியிலுள்ள பண்டிதரையாவது அழைத்து வந்து காட்டலாமா? சரி சென்று பார்க்கின்றேன்.

[மித்ருராவ் சென்று வைத்தியரை அழைத்து வருகிறார்.]

மித்ரு. வ-ம்:—ஐயா! வைத்தியரே! இதோ பார்த்தீரா? இம்மாது தான், இவள் நல்லவிதமாக ஆகவேண்டியது தங்களின் கடமைதான்.

பண்டிதர். வ-ம்:—ஆம் இப்பெண்மணிக்கு என்ன?

மித்ரு. வ-ம்:—வேறொன்று மில்லை, தெரிவிக்கின்றேன் கேளுங்கள்.

மித்ருராவ் விருத்தம். இராகம்—செஞ்சுருட்டி.

பண்டிதரே கேளீரையா பரிவுள்ள இந்தமாது
ஜண்டிபோல் சப்தமிட்டு சம்சார வாழ்க்கைதன்னில்
அண்டாமல் வெருத்துநின்ற அகங்கொண்டு திரிவதாலே
உண்டான நோயைக்கண்டு உரைத்திடீர் உரைத்திடீரே.

மித்ரு. வ-ப்:—ஐயா ! வைத்தியரே ! இம்மாதை நான் விவாகம் புரிந்து ஆறுமாதகாலமாகியது இது நாள்வரையில் இவள் வீட்டிற்கு அடங்குவதில்லை, நமது வார்த்தைக்கு அடங்குவதில்லை, வீட்டிலுள்ள வேலைகளை செய்வதில்லை, பைத்தியங்கொண்டவள்போல் பினத்தித்திரிகின்றாள், காரணம் எங்களுக்கு இன்னதென விளங்கவில்லை, அதின் பொருட்டே தங்களை யழைத்து வந்தேன்.

வைத்தியர். வ-ம்:—எதோ, குழந்தே! கையைக்காட்டு நாடியின் ஓட்டத்தைப் பார்க்கலாம்.

[சக்குபாயின் கையைப்பிடித்துப் பார்த்து.]

வைத்தியர். வ-ப்:—அப்பா ! இப்படி என்னருகில்வா ! இந்த பெண்ணுக்கு உடம்பில் பித்தமதிகரித்து மண்டைக்கேரி அதின் பொருட்டு மூளைவரண்டு, இவ்விதமான கொடிய செய்கையில் சம்பந்தம் படுத்தியது, ஆனல் எனை எப்போதழைத்து வந்தவன் இன்று பொழுது தவறிமாத்திரம் அழைத்து வந்திருப்பாயேல் இன்னவளின் உயிருக்கே அபாயமேற்பட்டிருக்கும், உனது காசு நல்ல காசாகையால் இனி இவள் உயிருக்குபயமில்லை, ஆயினும் அவிழ்தந்தர உனது ஆலோசனை எப்படி.

மித்ரு. வ-ம்:—பண்டிதரே ! என்ன ஆலோசனை யிருக்கின்றது, தாங்கள் காசைப்பற்றி கவனிக்கவேண்டிய தில்லை, எவ்வளவு பொருளாயினும் தருவதற்கு சித்தமாக இருக்கின்றேன். ஆனல் இப் பெண்மாத்திரம் நல்லவிதமாக தேரிவிட்டால் வருடா வருடமும் ஏதோ என்னாலியன்றவாறு தங்களை சந்தோஷிப் பிக்கின்றேன்.

வைத்தி. வ-ப்:—ஆனல் அவிழ்தம் கொடுக்கலாமல்லவோ ?

மித்ரு. வ-ம்:—அதற்கென்ன சந்தேகமா ?

[வைத்தியர் அவிழ்தம் கொடுத்துவிட்டு மித்ருராவும் வைத்தியரும் சென்றுவிடுகின்றார்கள். சக்குபாய் தனித்து நின்று பகவானை துதிக்கின்றாள்.]

### ஞானபண்டித மோதிலால் என்றமெட்டு.

பல்லவி

கபடநாடக சூஸ்திரா
காருண்ய நேத்ரா (க)

அநுபல்லவி

கவலைக்குள்ளானேன் கலங்கிடலானேன்
அபலைபோல் நின்றிடலானேன் ஹரிதேவனே (க)

தொகையரு

கனமுடனெனையீன்ற கருத்துள்ள பெற்றோர்கள்
கபடமே செய்தாரையோ
உனது திருதரிசனம் உத்தமாயான்காண
உருகினேன் நெஞ்சமையோ

ஷை அநுபல்லவி தொடர்

அரிபரந்தாமா அமரர்கள் நேமா
ஆனந்தவைபோக ராமா அடமேன் சீமா (க)

தொகையரு

அன்புடன் மணர்ந்திட்ட ஆளனுர் இதுசூது
அரியாமல் பொருள்களெல்லாம்
கண்டவர்க்களித்துமே காணுது மனநிலையை
கலங்குரார் தனது உள்ளம்

ஷை அநுபல்லவி தொடர்

நந்த வைகுந்த நளின கோவிந்தா
ஷண்முகன் செந்தமிழ்சொந்தா சாற்றினேன் நின்தாள் (க)

சக்கு. வ-ப்:—பக்தர்கள் அனுதினமும் பணிந்திலகும் பாண்டுரங்கா! ஒன்றுமறியாத இவ்வடியாளுக்கு அன்று ஓர் பிராமணர்போல் தோன்றி இத் தம்பூரைகொடுத்து உனது புகழையும் உரைக்க அன்று முதல் உனைகாணும்பொருட்டே சிந்தித்து வருந்தி நிற்க எனது பெற்ருேர் எனது கொள்கையை யுணராது, எனது பக்தியைக்கெடுக்கவும் பந்தபாசவினையை மூட்டிக்கொள்ளவும் எனை இம்மனையின் மன்னவருக்கு மணம்புரிந்து வைத்தனரே! ஹா! அகிலமுற்றும் இரண்டடியாக அளந்த அச்சுதா! உச்சிதா! பச்சைமாமலைபோன்ற பகரமான மேனியின் அழகு வாய்ந்த கச்சிதா! இது வனைத்தும் அறியாமல் எனது காதலர் என்பொருட்டு, பூஜாரிகளுக்கும், பண்டிதர்களுக்கும் பலவிதத்தில் காசுகளை அழிக்கின்றனரே? ஹா! இப்பழிக்கு யானல்லவோ காரணமாகினேன்.

[இதற்குள் மித்ருராவ் வருகிருர்.]

மித்ரு. வ-ப்:—அடி ! சண்டாளி ! மறுபடியுமா பினத்தித்திரிய ஆரம்பித்து விட்டாய், உனக்கு பேயும் பிடிக்கவில்லை, பித்தமும் அதிகரிக்கவில்லை உனது மனகர்வமே இப்படியெல்லாம் திரிகின்றாய் என்பது இப்பொழுதுதான் விளங்குகின்றது, இதையறியாமல் வீணில் காசுகளையெல்லாம் சிலவு செய்தேன். பாதகி உனை இனி லேசில் விடுவதில்லை இதோ இந்த தூணில் உனை கட்டிவைத்து செல்லுகிறேன், இதே கதிதான் நீ, இப்படியே மடிந்துப்போ !

[மித்ருராவ் சக்குபாயை தூணில் கட்டிப் போட்டுச் செல்கிறான் சக்குபாய் புலம்பிக் கொண்டிருக்கின்றாள்.

சீன்:—15.] [இடம்:—அரண்மனையின் வாயற்படி.

கதாநாயகர்:—மித்ருராவ், விமலாபாய், பிராமணர்.

[பகவான் பிராமண ரூபங்கொண்டு மித்ருராவ் அரண்மனை வாயற்படியில் நின்று அமுது கேட்கிறார்.]

பிராமணர். வ-ம்:—தாயி! இவ்வடியேனுக்கு கொஞ்சம் அமுது கொடுப்பீர்களா ?

விமலா. வ-ப்:—எவன்டா நீ ? பிச்சைக்கார பயல்களுக்கெல்லாம் பசியைபாற்ற இது சத்திரமென்று நினைத்துக்கொண்டனையா ? எங்கேயாவதுபோய் கூலியெடுக்கபடாதா ? போடாபோ பைத்தியக்காரா.

பிராமணர். வ-ப்:—போகட்டும் தாயே ! இப் பிச்சைக்கார பயலுக்கு கொஞ்சம் அமுது அளிப்பதால் நீங்கள் ஏழைகளாகி விடுவீர்போலும், என்னசெய்வது இப் பாழான பிச்சைக்கார வேடம் தங்களை இவ்விதம் கேட்கும்படி தெரிவித்தது, எல்லாம் எனது ஊழ்வினையே, ஆனாலும் கொஞ்சம் நீராகாரமாவது தரமாட்டீரா ?

விமலா. வ-ப்:—ஏது பிச்சைக்கு வந்தவன் லஜ்ஜைசெய்ய ஆரம்பித்து விட்டாய்போலிருக்கின்றதே, ஒழுங்குடன் செல்கின்றனையா அல்லது உதைப்பட்டு ஓடப்போகின்றனையா ? சீ நாயே ! போ வெளியே.

பிராமணர். வ-ப்:—தாயே உண்மைதான், அபையமென்றடைந்தவரை அடித்து அனுப்புதல்தான் அதிக நீதி அதிதிகளை அடித்துத் துரத்தும் பொருட்டுதான் நீயும் இவ் வந்தணர் குலத்தில் அவதரித்துள்ளீர்போலும், போகட்டும் சற்று இத் திண்ணைமீதாவது அமர்ந்து சிரமபரிகாரம் செய்துக்கொண்டு செல்லப்படாதா ?

விமலா. வ-ப்:—அடே ! மடப்பிராமணா ! உனக்கு எத்தனை முறைச் சொல்வது, உங்களைப்போன்ற திண்ணைத் தூங்கிகளின் சிரமப்பரிகாரத்திற்காகதான் இங்கு திண்ணை கட்டிவைத்திருக்கின்

றதோ இதோ பார் என் மகனை அழைத்து உனை ஏக்கதிபடுத்துகிறேன். அடே குழந்தாய்! மித்ரு!

மித்ரு. வ-ப்:—தாயே! ஏனழைத்தீர்?

விமலா. வ-ப்:—அடே! இதோ பார்த்தனையா இந்தப்பிச்சைக்காரபயலை, பிச்சைக்கு வந்தவன் பெரிய வம்புவார்த்தைகளைப்பேசுகின்றான்.

மித்ரு. வ-ப்:—அடே! பிச்சைக்காரப்பயலே நீயார்?

பிராமணர். வ-ம்:—அப்பா! கோபியாதே? மாதர்களுக்குதான் பேதமையென்பது அணிகலம், நீ ஆடவனாக இருந்தும் இச்செய்தியை யோசியாமல் கோபிக்கின்றாயே?

மித்ரு. வ-ப்:—என்ன? போசிக்கவேண்டுமா? என்னிடத்திலேயே இவ்வளவு அகம்பாவத்துடன் பேசுகிறவன் என் தாயாரிடம் எவ்வளவு பேசியிருக்கமாட்டாய் இதோபார் உனை என்னகதிபடுத்துகின்றேன்.

மித்ருராவ் விருத்தம். இராகம்—மோகனம்.

பிச்சைக்கு வந்திருந்து பெண்டாள அழைப்பவன்போல்
லஜ்ஜைகள் மிகவேபேசி நயம்பட மொழியுரைத்து
கொச்சையே செய்யவந்த கொடும்பாவி உனையேயின்று
மிச்சமாய் விட்டிடாமல் மண்டையை உடைப்பேன்பாராய்.

மித்ரு. வ-ப்:—இதோ இந்த தடியினால் உன்தலையை சுக்கல் சுக்கலாக உடைத்தெறிவேன் ஜாக்கிரதை.

பிராமணர். வ-ம்:—அதுவும் உண்மைதான், மனங்கசிந்து பசியுடன் வருபவரை மண்டையை யுடைத்து அனுப்பவேண்டியதுதான், இதுவனைத்திற்கும் உனது மனைவியல்லவோ காரணம்?

மித்ரு. வ-ம்:—போடாபோ பிச்சைக்காரப்பயலே? என் மனைவி ஏன் இதற்கு காரணமாகின்றாள்?

பிராமணர். வ-ப்:—இல்லை! உன் மனைவி, உனக்கிணங்கி நடக்காமனும், அவளை நீ தூணில் கட்டிப்போட்டு முள்ள மனக்கலவரத்தினாலும் இவ்விதம் எனைக்கடிந்துரைக்க நேர்ந்தது போகட்டும் மற்றோர் சமயம் பார்த்துக்கொள்ளலாம்.

மித்ரு. வ-ப்:—ஐயா! போகாதீர் நில்லுங்கள்; யான் செய்ததெல்லாம் அபச்சாரம் மன்னித்துக்கொள்ளுங்கள், எனது மனைவியையான் அரண்மனைக்குள் கட்டிவைத்திருப்பது தங்களுக்கெவ்விதம் தெரியும்,

பிராமணர். வ-ப்:—இதையும் ஒருவர் தெரிவிக்கவேண்டுமா? ஆரூடகாரர்களுக்கு யாவும் அஞ்சனத்தினால் அறியக்கூடிய சக்தியுண்டல்லவோ?

மித்ரு. வ-ப்:—தாங்களென்ன ஜோசியரா?

பிராமணர். வ-ப்:—இதையும் கேழ்கவேண்டுமா எதோ அப்பெண்மணியை இப்படி அழைத்துவா பார்க்கலாம்.

மித்ரு. வ-ம்:—தாங்களே அரண்மனைக்குள் வந்து பாருங்கள் சுவாமி!

பிராமணர். வ-ம்:—ஆனால் சரி வா செல்வோம்.

[போகிறார்கள்.]

சீன்:—16.] [இடம்:--அரண்மனை உள்புரம்.

கதாநாயகர்:—மித்ருராவ், சக்குபாய், பிராமணர்.

[சக்குபாய் கட்டுண்டு கிடக்கின்றாள் மித்ருராவ் பிராமணரை அழைத்து வருகிறான்.]

மித்ரு. வ-ப்:—சுவாமி! இதோ பார்த்தீர்களா?

பிராமணர். வ-ப்:—ஆஹா! இப் பெண்மணிதானா? ஐயோ பாவம்! இச் சிறுபிராயத்தில் இம் மங்கைக்கு இது என்ன விதி? போகட்டும், அப்பா! இப்படி வா! இந்த குழந்தையின் வியாதி இன்னதென நன்குணர்ந்துக் கொண்டனையா? அதாவது இக் குழந்தைக்கு,

மார்கழி மாதம் திருவாத்திறை நாள் என்ற மெட்டு.

முனியொன்று பிடித்து மிரட்டுதே வேளை
முழிப்பதில் பயனில்லை இது
சனியின் கோட்பாடு ஜெனித்ததின் தோஷம்
சேதி யபாயமில்லை (மு)
ஏழாம் வயதில் இவளை இம்முனிதான்
இன்பமாய் தொடர்ந்தோடா மனதில்
மீளாத்துயரம் மாதிவள் கொள்ள
மிக விரட்டாதிரடா (மு)
அழகினில் மிகுந்தாள் அறிவினில் சிறந்தாள்
அய்யன் வரத்தாள் பிறந்தாள் வெகு
பழக்கமாய் ஷண்முகன் பகர்தமிழ் முறைபோல்
பாடியே துதித்திருந்தாள் (மு)

பிராமணர். வ-ப்:—இனி ஆலோசிப்பதில் ஒன்றும் பயனில்லை இப்பொழுதே இதற்குத் தகுந்த பரிகாரம் செய்தாலொழிய பிறகு இம்முனி இவளைவிட்டு நீங்காது.

மித்ரு. வ-ப்:—சுவாமிகளே! எல்லாம் தாங்கள்தான் இது விஷயத்தை கவனிக்கவேண்டும், இப் பெண்மணி நல்லவிதமாக தேரி விட்டால் தங்களை எக்காலத்திலும் மறக்கேன்.

பிராமணர். வ-ம்:—அப்பா! அப்படியானால், அனுதினமும் காலை மாலை இரண்டு வேளையும் அதோ தெரிகின்ற அக்குளக் கரையில் யான் அமர்ந்திருப்பேன் அங்கனம் இப் பெண்மணியை அனுப்புவாயேல் யான் என்னால் கூடியவரை கவனிக்கின்றேன்.

மித்ரு. வ-ம்:—அப்படியே செய்யுங்கள் சுவாமி.

[பிராமணர் போகிறார்.]

சீன்:—17.] [இடம்:—அந்தபுரம்.

கதாநாயகர்:—மித்ருராவ், சக்குபாய், பகவான், சுந்தரி.

[சக்குபாய் பிராமணரால் சௌக்கிய மடைய பிறகு சிலநாள் சென்று கபீர், கமால், ராமதாஸ், ஜெய தேவர் முதலிய பேர்கள் பண் டரிபுரம் போவதைக்கண்டு தனது நாதனை விடைகேட் கின்றாள்.]

மித்ரு. வ-ம்:—பெண்ணே! என்ன மிகவும் வருத்தத்துட னமர்ந்திருக்கின்றாய்.

சக்கு. வ-ம்:—பிராணகாதலா! வருத்த மொன்று மில்லை, அதாவது,

கிளிக்கண்ணி வர்னமெட்டு.

புண்டலீகன் தனையே புண்ணியர்கள் காணுதற்கு
பண்டரி புரமேகுரார் நாதா
பாக்ய சீலரே யறிவீர் (பு)

மித்ருராவ் மேற்படி மெட்டு.

போனல் நமக்கென்னடி பூவையே யென் கோகிலமே
காணாத தரிசனமோ கண்ணே
கருத்துமிக நோகலாமோ (போ)

சக்கு. வ-ம்:—நாதா! தாங்கள் அனேக முறைசென்று கண் டிருக்கலாம், ஆனல் இவ்வடியாளை தாங்கள் விவாகம் செய்த நாள் முதற்கொண்டு இதுவரையில் ஒருவருடமாவது சாக்ஷாத் ஸ்ரீபாண் டாமன் வாழ்ந்திரா நின்ற அப்பண்டரி க்ஷேத்திரத்திற்குச்செல்ல வில்லையாதலாலும் அனேக பக்தர்கள் அங்கு செல்வதை யான் கண்டேனுதலாலும் அதுபோலவே.

சக்குபாய் மேற்படி மெட்டு

நாதனே நாமும் சென்று நந்தகோபனைக்கண்டு
பாதம்பணிந்திடுவோம் நாதா
பாக்கியமடைந்திடுவோம் (பு)

மித்ரு. வ-ம்:—பெண்ணே! நீயுரைப்பது உண்மையே ஆனல், உன்பொருட்டு, உன்னை விவாகம் செய்த நாள்முதல் இதுவரையில் அனேகபொருள்கள் விரைய மானது பற்றியும், உன் விஷயத்தில்

வைத்தியருக்கும், பூஜாலிகளுக்கும், மற்றும் பலவிதத்திலும் சிலவு செய்தமையால்,

மித்ருராவ் ஷ்டி மெட்டு

ஆரணங்கே மயிலே அடுத்தவருடம் நாமே
ஸ்ரீரகுராமன்தனை மானே
சேவிப்போம் எனது தேனே (போ)

சக்கு. வ-ம்:—இது வரையில் வீணில் பலவிதமான சிலவு செய்தீர், ஆனால் சாக்ஷாத் பகவான் விஷயத்தில் சிலவு செய்வதைப் பற்றி நமக்கு யாதும் குறைவு ஏற்படாது, இது விஷயமும் தாங்க ளறியாததல்ல, தவிர இக்காயமோ,

சக்குபாய் ஷ்டி மெட்டு

இன்றைக்கிருக்கும் காயம் இருந்திடும் நாளையென்று
கண்டவர்யார்தானையா நாதா
கடுமனது வேண்டாமையா (4)

மித்ரு. வ-ம்:—அடி! துஷ்டி! நீ கூடியவரையில் மகா ஜெக ஜாலியாக இருக்கின்றாய்? யான் அடுத்த வருடம் போகலாமென் றால், அதை மறுத்து இப்பொழுதே போகவேண்டுமென்றும், இன் றைக்கிருக்கும் காயம் நாளைக்கிருக்காது என்றும், எல்லாம் கரை கண்டாற்போல் பேசுகின்றாயே, என்னடி என்ன? உனது உயிரை கையில் பிடித்து வைத்திருக்கின்றாயா? பாதகி! இதோ பார்,

மித்ருராவ் ஷ்டி மெட்டு

எந்தன் வார்த்தை தடுத்து இருமாப்புடன் பேசுராய்
உந்தனை தூணில் கட்டி அடி துஷ்டி
உயிர் வதைப்பேன் பாருமடி (போ)

மித்ரு. வ-ம்:—சண்டாளி! போகட்டுமென்று உனை அடிக்கா மலும், உபத்திரவமான வேலைகளை செய்ய வொட்டாமலும் வைத் திருந்தால் பலவிதமாக என்னை உபத்திரவமா செய்கின்றாய், இதோ பார் இந்த தூணில் உனை கட்டிப்போட்டு நீ அந்த பண்டரிநாதனை காணப்போவதை அறிகின்றேன்.

[மித்ருராவ் சக்குபாயை தூணில் கட்டிப்போட்டு விட்டு செல்கின்றார், சக்குபாய் தூணில் கட்டுண்டு வருந்துகின்றாள்.]

சக்கு வ-ம்:—ஹா! அடியவர்களின் குறைக்கிறங்கும் அகில ரக்ஷகா! பேதையான் பெண்பால், உனை சதா துதித்திருப்பவள், அதிலும் ஆளனுக்கடங்கி நடக்கக் கூடியவளாகிய எனை நீ இவ் விதம் சோதிக்கலாகுமா? ஐயோ! உனது திவ்ய தரிசனத்தை கண் காணிக்கலாமென எத்தகைய ஆவலுற்றிருந்தேன், அத்தகைய ஆவ லனைத்தும், எனது நாதன் கடுஞ்சினத்திற்குள் ளடங்கியதே, தவிர, கேவலம் ஒரு பெண்ணை இவ்விதமா சோதிப்பது, அகிலமனைத்து

முண்ட ஆதிகேசவனாகிய நீ இதை அறியாததா? ஐயோ! எனது குறையை யகற்ற இவ்வரையில் ஒருவரையும் காணோமே, என்னை யார்தான் இதுசமயம் காப்பாற்றப்போகின்றனர்? எனது நாதனுக்கு இது விஷயத்தில் யார் நன்மதி போதிக்கப் போகின்றனர் என்ன தான் இவ்வடியாள் மீது தேவரீருக்கு கோபமிருப்பினும், உனது க்ஷேத்திரத்திற் கனுகியான் தெரிசிக்கும் மார்க்கத்தை இவ் வடியேனுக்கு பரிபாலிக்கப்படாதா? ஐயோ!

பண்டித மோதிலால்நேரை என்றமெட்டு.

கள்ளநெஞ்சமாமோ இன்னும் கண்ணபிரானே (க)
கண்ணபிரானே யான் பெண்மணிதானே (க)
சொல்லொணாதுயர்க்குள்ளானேன் சோதனையிதோ புண்யனே
உள்ளமே மிகமெலிந்து உனைபணிந்தேனே
உனைபணிந்தேனே யான் தினமும் நொந்தேனே (க)

தொகையறு

கனமுடன் உந்தனின் தரிசனம் தன்னையே
காணவே வெகுபேர் செல்ல
மனமது துடித்துமே மாபாவிகாணவே
மனுளனையானும் மெள்ள
குணமாக கேட்கவும் கோபித்து என்நாதன்
கட்டினார் தூணதனிலே
தினகரதேவனே திவ்யதிருதெரிசனம்
நீதின்றி காண்பேனென்றே

மேற்படி சரணத்தொடர்.

பெண்பாவம் பொல்லாதையா பேதலிப்பதாகாதையா
ஷண்முகன் மொழிக்கிறங்கி ஜல்திவாருமே
ஜல்திவாருமே என் தொல்லைதீருமே (க)

சக்கு. வ-ம்:—ஹா! பரந்தாமா! அடியேன் உனைகாணும் பொருட்டு எத்தனையோ காலமாக பிரயாசையுற்றிருக்கின்றேன் அப்படி இருந்து, இது சமயமும் எனக்கு கைக்கூடாது போயிற்றே! இது சமயத்தில் எனக்கு யார்தான் தேருதலுரைக்கப்போகின்றனர். அல்லது என் நாதனுக்குதான் யார் புத்திமதிகளை போதித்து என் நாதன் எனக்கு விடையளித்தனுப்பும்படி முயற்சிக்கப்போகின்றனர், ஹா! ஆபத்சாகாயா! ஒரு பெண்பால் இதுபோலவே எத்தனை காலம் துன்பத்தி லாழ்ந்திருக்கமுடியும், துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனாகிய தாங்களே இத்தகைய கபடவஞ்சகம் புரிவீரா கில், மானிடர்கள் கபடம் புரிய கேட்கவேண்டுமோ? ஐயோ! உனது க்ஷேத்திரத்தைக்காணாது என் மனது எவ்விதம் சகித்திருக்கமுடியும், எல்லாவற்றிற்கும் உனதருளே காரணம். [பகவான் ப்ராப்தம்.

## பகவான் தரு.

அஞ்சவேண்டாம் பஞ்சவரே என்றமெட்டு.

சஞ்சலமே கொண்டிடாதே
தாயேயுனை ஆதரிப்பேன் (ச)
அஞ்சிடாதே நீ அரைநொடியிலெந்தன்
ஆலயத்தைக்காண அநுக்கிரஹம் செய்குவேன்
அம்மணியே விம்மிநீயே
தன்மையின்றி புலம்பிடாதே (ச)

பகவான். வ-ம்:—குழந்தாய்! சக்குபா! புலம்பாதே? உனது கொள்கை.யொன்றும் வீண்போகாது இன்னும் அரைக்ஷணத்தில் உனது துன்பம்தீரும் அஞ்சவேண்டாம் யான் செல்லுகிறேன்.

[பகவான் மறைகிறார், சக்குபாய் தனித்திருக்கும் சமயம் அடுத்தவீட்டு சுந்தரிபோல் பகவான் வேடங் கொண்டு சக்குபாயிடம் வருகிறார்.]

சுந்தரி. வ-ம்:—ஏனம்மா சக்குபாய் இப்படி புலம்பிக்கொண்டிருக்கின்றாய் காரணமென்ன யார் உன்னை இப்படி கட்டுப்படசெய்தவர்.

சக்குபாய். வ-ம்:—அம்மா! ஊரினிடமாக அனேக பக்த சிரோண்மணிகள் சாக்ஷாத் பரந்தாமனைக்காணும் பொருட்டு பண்டரிபுரத்திற்கு ஏகுகின்றனர் யானும் செல்வதற்காக என் நாதனை யழைத்ததில் அன்னவர் அடுத்த வருடம் செல்லலாமென்றனர், யான் அதற்காக வற்புருத்தினேனென்று என் நாதன் எனை இத்தகைய துன்புத்தி வாழ்ந்தச்செய்தனர்.

சுந்தரி. வ-ம்:—ஆம் நீசென்றால் எத்தனை நாளாகும்?

சக்கு. வ-ம்:—அம்மா! இரண்டு நாளில் வந்து விடலாம்.

சுந்தரி. வ-ம்:—அம்மா! அப்படி யானால் உனைபோலவே பாவனைக்காட்டி உன் புருஷனிடம் யானிருக்கின்றேன். நீ அதி சீக்கிரத்தில் வந்து விடுகின்றாயா?

சக்கு. வ-ம்:—அப்படியே வந்து விடுகின்றேன் தாயே!

சுந்தரி. வ-ம்:—அப்படியானால் உனக்கு பதிலாக எனை தூணில் கட்டிவிடு.

[சுந்தரி சக்குபாயின் கட்டை யவிழ்க்க சக்குபாய் சுந்தரியை கட்டிவிட்டு செல்கிறாள்.]

சீன்:—18.] [இடம்:—நந்தவனம்.

கதாநாயகர்:—சக்குபாய்.

[சக்குபாய் பண்டரிபுர நந்த வனத்தில் பகவானுக்காக மலர் பரிக்கின்றாள்.]

சக்கு. வ-ப்:—ஹா! பரமாத்மா! சகல சௌபாக்கியங்களிருந்தும், உனது திவ்யதரிசனத்தைக் காணாததால் இதுநாள் பரியந்தம் எனது கணவனால் என்னை பேய்பிடித்தவளென்றும், இன்னும் பல விதமான துர்ச்செய்கைகளி லீடுபட்டவளென்றும் வீண்பெயரெடுத்தேன், ஆயினும் இதுநாள் கழித்து உனது ஆலயத்தின் மகிமையைக் காண இவ்விடமடைந்தேன்,

கல்லோ சொல்லாய் மனது என்ற மெட்டு.

சாக்ஷாத் சாமளதேக சாரண்முகந்த லீலா (சா)
தீக்ஷலாவண்ணியனே தினகர புண்ணியனே
மோக்ஷவீக்ஷண்யமூல முரளியே நிகேதனனே (சா)

கஜல்.

சஞ்சலம் தீர்த்தெனை சந்தோஷமாயிங்கு
தான்வரச் செய்த ராமா
பஞ்சவர் சகாயனே பாஞ்சாலிதமையனே
பகைவர் சம்மார சோமா

மேற்படி பாட்டுத் தொடர்.

காக்ஷியதை தந்தருள்வாய் கவியுரைக்கவரமருள்வாய்
காகுத்தனே திபாகனருள் கருதும் ஷண்முகன் நினைவாய் (சா)

சக்கு. வ-ப்:—பூஜை காலமோ சமீபித்துவிட்டது, பகவானின் பூஜைக்கு மலர்பரித்துச் செல்வோம்.

[சக்குபாய் மலர்பரித்து சர்ப்பம் தீண்டி புலம்பல்.]

சக்குபாய் விருத்தம். இராகம்—முகாரி.

ஐயனே உனக்கேதொண்டு அடிமையான் செய்வதற்கே
மெய்யனே மலரைக்கொய்ய மாபாவி அரவமென்னை
கையதில் தீண்டிமெத்த கலங்குறேன் மனதுவையோ
துய்யனே இனியென்செய்வேன் துடிக்குதே உயிர்தானையா.

சக்கு. வ-ப்:—ஹா! ஆபத்பாந்தவா! அடியேன் நினைந்த நினைவனைத்தும் இறுதியில் வீண் விபரீதமாக முடிந்ததே? ஐயோ! அடுத்தவீட்டிலிருக்கும் சுந்தரியை என் நாதனுக்கு என் பதிலாக

விடுத்துவந்தேனே? உன்னால் என் நாதனுக்கு யான் துரோகம் புரிந்தவளானேனே? ஹா! பரமாத்மா? இப்பழியனைத்தும் உன்னையல்லவோ சார்ந்தது, ஆயினும் எனதுயிர்போவது நிச்சயம், எப்படியேனும் உனது ஆலயத்தின்கண் அணுகி எனதுயிரைத்துறக்கின்றேன், பிறகு உனது கருணை என்னை எக்கதியில் விடினும் விடட்டும்.

[சக்குபாய் மயக்கத்துடன் ஓடுகிறாள்.]

ஸீன்:—19.] [இடம்:—பண்டரிநாதன் சந்நிதி.

கதாநாயகர்:—சக்குபாய், பிராமணர்கள், மாயஜோகி.

[சக்குபாய் சன்னிதி முன் ஓடிவருகிறாள்.]

சக்குபாய் தரு

ஐயோநான் மதிமோசம் போனேனே என்றமெட்டு.

பல்லவி

சண்டாள நாகத்தினால் சாமளனே
சதிதானே அடைந்தேனே மிக நான்தானே (ச)

அநுபல்லவி

சங்குசக்ரஸீமா எனை சாகச்செய்யலாமா (ச)

சரணம்

கொண்டவனைப் பிரிந்தேன்
கோதையானிங் கடைந்தேன்
தொண்டுக்கே புட்பம் கொய்தேன்
துன்பமிக வடைந்தேன் (ச)
கணவனுக் கெவருரைப்பார்
கன்னியெனை யார்தான் காப்பார்
துணையாய் எவர்தான் நிற்பார்
துளஸிங்கனே நீ கண்பார் (ச)

[சக்குபாய் கீழே விழுந்து மடிகிறாள் பிராமணர்கள் வருகிறார்கள்.

குப்பாசாஸ்திரி. வ-ம்:—எங்காணும் அப்பா சாஸ்திரி! இது என்ன விபரீதம், இப்பெண் யாராக இருக்கலாம், இங்கு இப்படி புலம்பிக்கொண்டே மடிந்துவிட்டாளே, இதற்கென்ன செய்வது.

[பகவான் ஜோகியுருகொண்டு வருகிறார்.]

ஜோகி. வ-ம்:—ஐயோ பாவம்? இது யார் இந்த பெண்? இவளை வதைத்தெரிந்தவர் யாவர், ஐயா! அதை சற்று தெரிவியுங்கள்.

அப்பா. வ-ம்:—ஐயா! இப் பெண் யாரோ தெரியவில்லை, ஏதோ சர்ப்பம் தீண்டியதாக நின்று புலம்பிக்கொண்டிருந்தாள் யாங்கள் ஓடிவருவதற்குள் கீழ் விழுந்து மடிந்துவிட்டாள்.

ஜோகி. வ-ம்:—ஆனால் என்னிடம் பாம்புகடிக்கு ஒளடதமிருக்கின்றது, யான் அதை தந்து உயிர்பெறச் செய்கின்றேன் நீங்கள் அனைவரும் ஓர்புரமாக சென்று இருங்கள்.

[பிராமணாகள் செல்கின்றனர், சக்குபாயிக்கு ஜோகி மருந்துதந்து எழுப்புகின்றனர். சக்குபாய் எழுந்துநிற்க ஜோகி மறைகின்றனர் பகவான் ப்ராப்தமாகின்றார்.]

சக்கு. வ-ம்:—சுவாமி! அடியாள் நமஸ்கரிக்கின்றேன், அடியேனை ஆட்கொள்ளவும்.

பகவான். வ-ம்:—குழந்தாய்! சக்குபா! அஞ்சாதே! உனக்கு யானிப்போது காக்ஷி தருவேனானால் நீ உன் காதலுக்கு துரோகம் புரிந்தவளாகுவாய், ஆதலால் நீ அரண்மனைக்குச் செல் இன்னும் சில காலத்திற்குள் யான் உங்களிருவருக்கும் தரிசனம் தந்து காக்ஷி தருகின்றேன் அஞ்சாதே அரண்மனைக்குச் செல்.

[பகவான் மறைகிறார். சக்குபாய் செல்கிறாள். பிறகு சிலகாலம் சென்று சக்குபாயிக்கும் மித்ருராவுக்கும் பகவான்தோன்றி காக்ஷிபளிக்கின்றார்.]

சுபம்! சுபம்!! சுபம்!!!

சரித்திரம் முற்றிற்று.

# டிராமா சரித்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வள்ளித் திருமணம் | 0 | 4 | 0 |
| லவ-குச சரித்திரம் | 0 | 4 | 0 |
| அல்லி அர்ஜுனு | 0 | 4 | 0 |
| சம்பூர்ண அரிச்சந்திரா | 0 | 4 | 0 |
| சாவித்திரி | 0 | 4 | 0 |
| கோவலன் சரித்திரம் | 0 | 4 | 0 |
| ஞானசவுந்தரி டிராமா | 0 | 4 | 0 |
| ராமதாஸ் சரித்திரம் | 4 | 4 | 0 |
| கபீர்தாஸ் சரித்திரம் | 0 | 4 | 0 |
| மார்க்கண்டேயர் சரித்திரம் | 0 | 4 | 0 |
| நந்தனுர் சரித்திர டிராமா | 0 | 4 | 0 |
| நல்லதங்காள் டிராமா | 0 | 4 | 0 |
| பவளக்கொடி சரித்திரம் | 0 | 4 | 0 |
| சிறுத்தொண்டபத்தன் சரித்திரம் | 0 | 4 | 0 |
| பாரிஜாத புஷ்பஹாரணம் | 0 | 4 | 0 |
| சகுந்தலா சரித்திரம் | 0 | 4 | 0 |
| பக்த பிரஹ்லாதா | 0 | 4 | 0 |
| தூக்குத்தூக்கி டிராமா | 0 | 4 | 0 |
| சாரங்கதரன் டிராமா | 0 | 4 | 0 |
| டம்பாச்சாரி | 0 | 4 | 0 |
| குலேபகாவலி | 0 | 4 | 0 |
| பாதுகா பட்டாபிஷேகம் | 0 | 4 | 0 |
| துளசிதாஸ் சரித்திரம் | 0 | 4 | 0 |

இன்னும் அநேக சரித்திரங்களும் அச்சிட்டு வருகிறேன்.

நாடகாசிரியர்:—

V. A. தியாகராஜ செட்டியார்,

1/105 பிராட்வே, மதராஸ்.

Selvarangan Press, Madras.